297

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 1914

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ரு.	பிரமாதீசஸு தைமீ	பகுதி ௧0

சிவ வழிபாடு.

சிவவழிபாடு—சிவனுக்குச் செய்யும் வழிபாடு என விரியும். சிவம்—நிரதிசய இன்பமாகிய மங்கலம். வழிபாடு—வணக்கம். அந்த நிரதிசய இன்பமாகிய மங்கலத்தைக் கொடுப்பவனே சிவன் என்னும் பதிப்பொருள். நிரதிசய இன்பமென்பதுவே மோக்ஷமாதலின் சிவன் எனற்கு மோக்ஷதாதா எனப்பொருள் கூறுவது மொன்று.

இனி இத்தகைய சிவனது தன்மைகள் யாவை? வழிபடற்பாலர் யாவர்? அவனுக்குச் செய்யும் வழிபாடுகள் யாவை? வழிபாட்டால் அடையும் பலன் யாது? என ஆராய்வாம்.

சிவனது தன்மைகள்:-(1)ஏனைத் தேவராதியர் யாரும் பிறந்திறக்கு மியல்பினராதல் போல சிவபிரான் பிறத்தலும் இறத்தலுமில்லாத அநாதி நித்தியப் பொருளாதல். (2).எல்லாத்தேவருந் தன்னை வணங்கி வேண்டிய வேண்டியாங் கெய்தத் திருவருள் செய்து தான் வேறொருவரை வணங்கி நில்லாமை. (3) எல்லாத்தேவர் வலிமையும் தன்னுள்ளடங்குமாறு தான் வரம்பிலாற்றல் கொண்டுண்மை. (4) தானே மோக்ஷதாதாவாதல். (5) பஞ்சகிருத்திய சுதந்தரமுடைமை என இவை முதற்பலவாம்.

(1) வேதாகம புராணேதிகாச வாயிலாக ஆராயுமிடத்துச் சகலதேவர்களும் பிறரும் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலும் இறத்த

னும் கேட்கப்படுகின்றன. சிவபிரான் அங்ஙனம் பிறந்ததாக வேனும் இறந்ததாக வேனும் யாண்டுங் கேட்கப்படவில்லை. இதனை

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோநஞ் சோமேசர்—இல்லிற்
பிறந்தகதை யுங்கேளோம் பேருலகில் வாழ்ந்தாண்
டிறந்தகதை யுங்கேட் டிலோம்" என்பதாலறிக.

(2) சகல தேவர்களும் ஒவ்வொரு வரங்களை வேண்டிக் காலந்தோறும் சிவபிரானைப் பூஜித்து அருள் பெற்றதாகக் கூறுஞ் சரிதங்கள் பலவுள்ளன. யாண்டாவது எக்காலத்தேனும் சிவபிரான் வேறொருவரைப் பூஜித்ததாக எந்த நூலுங் கூறக் கேட்டிலம். இக்கருத்தை

"இன்னுமுயர் பரசிவனை யிருதிணையி னுயிரனைத்து
மன்னும்வழி பாடியற்றி வயங்கியவைக் கறிகுறியா
மின்னுபல தலம்பொலியு மன்றிமிளி ரனையபிரா
னுன்னியொரு வரைப்பூசை யுஞற்றியது முண்டுகொலோ."
என்பதாற்காண்க.

(3) சிவபிரான் சர்வவியாபக சக்தியுறுதலும், ஏனையதேவர்கள் வலிமையெல்லாம் அதனுள் வியாப்பியமா யடங்குதலும் கருதியே ஏனைய தேவர்கள் பெயர்களை யெல்லாம் சிவபிரானுக்கு உரியனவாகக் கூறும் வேதங்கள், சிவன் என்னும் திருநாமத்தை சிவபிரான் ஒருவருக்கே யன்றி வேறு எத்தேவர்க்கேனும் கூறாமல் விட்டது. இக்கருத்தை விளக்கியே

"சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனை யான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தா
லிவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே"

எனத் தமிழ்வேதங் கூறுதலுணர்க. அன்றியும், வேதங்களின் மத்தியில் உயிர் நிலையாக விளங்குவதும் சிவ நாமமே யாம். அதாவது:—இருக்கு, யசுர், சாமம் என வேதங்கள் மூன்று. அவற்றுள் நடுவாயது யசுர்வேதம். அது ஏழு காண்டங்களை யுடையது. அவற்றுள் நடுவணதாகிய நான்காவது காண்டத்தின் நடுவில் சிவபிரான் திருநாமம் விளங்குவதாக அடியில்வரும் செய்யுளானறியலாம்

மும்மறையி னடுமறையின் முனிவிலெழு காண்டத்திற்
செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையில்
அம்மநடுச் சங்கிதையி னாதியி னெழுத்துநடுப்
பொம்மலுற வமர்மனுவின் பொருளாவா னெவன் மைந்த.

வேதம் பலவிடங்களில் சிவபிரானைப்பிரமம் எனக்கூறுகின்றது. பிரமசப்தத்தை எல்லாச் சமயத்தாரும் தத்தம் கடவுளுக்கேற்றிக் கூறா நிற்பர். அங்ஙனம் கூறினும் பிரமசப்தம் சிவபிரானுக்கே யுரித்தாதல் விளக்குதும். கேனோபநிடதத்தில் இந்திரன் அக்கினி வாயு முதலியோர் அசுரர்களைப் போரில் வெற்றி கொண்ட ஜயசீலர் யாம் யாம் என்று செருக்குற, அதனையறிந்த பரமசிவன், அவர்கள் முன்னிலையில், ஒரு இயக்க வேடந்தாங்கிச்சென்று, ஒரு துரும்பை யெடுத்துக் கீழே நட்டு, இதனிடத்து உங்கள் வலிமையைக் காட்டுங்க ளென்று கூறினரெனவும், அக்கினியும் வாயுவும் தம் ஆற்றல் சிறிதுஞ் செல்லாமைகண்டு நாணமுற்று நிற்க, பின் இந்திரன் வந்தவுடன் இபக்க வேடந் தாங்கிவந்து நின்ற சிவபிரான் மறைந்தருளினர் எனவும், அப்பொழுது இமோற்பர்வத புத்திரியாகிய உமாதேவியார் விசும்பிற் றோன்றினாரெனவும், அவ்வம்மையாரை நோக்கி அம்மே! இவ்வியக்கன் யாவன்? என்று இந்திரன் கேட்ப "இவன் பிரமம்" என்று அம்மையார் கூறியருளினாரெனவும், கேட்கப்படுதல் பிரத்தியக்ஷமாம்.

இவ்வுபநிடதக்கூற்றால் இயக்க வுருவமாக வந்தது "பிரமம்" எனக் காணப்படினும், அவ்வுருவம் சிவபிரானென்பது எதனாற் பெறப்படு மெனில் "தாயுடன் சென்று பின்றாதையைக்கூடி" என்ற முறைப்படி உமாதேவியாராகிய சிவ சத்தியாற் காட்டப்பட்டமையால் அந்தப் பிரமம் பரமசிவனே யென்பது பசுமரத்தாணி போல் நாட்டப் பெறும். வாயு சங்கிதை இக்கதையை நன்குவிரித்துக் கூறும். அன்றியும்,

தோலாவவை நாப்ப ணடைந்து துரும்புநட்டு
மாலாதி விண்ணோர் வலிமுற்றவு மாற்றவல்லோ

ஞூலால முண்டோ னவனேயகி லங்களுக்கு
மேலாய வேத வெனவிண்டது சாமவேதம்.

என்னும் காஞ்சிப் புராணத்திருப்பாசுரத்தானுமுணர்க.

(4) அல்லதூஉம், யஜுர்வேத சமக மந்திரங்கள் அரி அயன் இந்திரன் முதலியோரை அன்னாதிகளுடன்சேர்த்து ஈயப்படும்பொருளாகக் கூறுகின்றமையும், சிவபிரான் ஈயுந்தாதாவாதலின் அப்பெருமானை அங்ஙனங் கூறாமையும், (ஒரு பிரபுவினிடம் யாசிப்பவர் அப்பிரபுவின் உடைமைப் பொருள்களில் எதையும் இரத்தல் போல அப்பிரபுவை நோக்கி உன்னைக் கொடு எனக்கேட்டலின்மை ஊகிக்கத் தக்கது) "பிறராற் சாதிக்க முடியாத முப்புரங்களையும் நீறாக்கி யுலகங்களைக் காத்தமையால் பசுபதி நீயே, யாமெல்லாம் பசுக்கள் என்று அங்கீகரித்தனர் தேவர்கள்" என்பது முதலிய சுருதிகளுண்மையும் சிவபிரானே மோக்ஷதாதா என்பதை வலியுறுத்துவனவாகும்.

(5) ஆன்மாக்களுக்கு அறிவு இச்சை தொழில்கள் விளங்க முதற்காரணமான மாயையினின்றுந் தநுவாதிகளைத் தோற்றுவித்தலாகிய சிருட்டியும், நிலைபெறச் செய்தலாகிய திதியும், இளைப்பொழித்தற்பொருட்டு மீட்டும் மாயையில் ஒடுக்குதலாகிய சங்காரமும், இருவினை யொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலாகிய திரோபவமும், பந்தம் விடுவித்தலாகிய அநுக்கிரகமும் என்று கூறப்பட்ட பஞ்சகிருத்தியங்கட்கும் சிவபிரானே தலைவராவர். பிரம விட்டுணுக்களுக்கன்றோ படைத்தல் காத்தல் உரியன வென்னின், அவர்கள் அவற்றைச் செய்தலில் அரசனது ஆணைப்படி நடத்தும் மந்திரி முதலியோரைப் போன்று சிவபிரானது ஆணைப்படி நடத்தப்பட்டவர்களே யல்லது சுதந்தரத்துவம் பெற்றவரல்லர். மன்மதனை நீறாக்கிய காலத்து அவன் றந்தையாகிய திருமால் தானே காத்தற்றொழிலின் முழுச்சுதந்தரம் பெற்றிருப்பின் தன் மகன் நீறுபடாது காத்திருக்கலாம். பிரமன் படைத்தற்றொழிலின் முழுச்சுதந்தர முடையனாயின் சிவபிரானாற் கொய்யப்பட்டதனது தலையை மீளப்படைத்திருக்கலாம். அங்ஙனஞ் செய்யாமையானே அவர்க்கு அத்தொழில்கள் சுதந்திரமுடையன வல்ல

வாதல் பெறப்படுதலுடன் சிவபிரானே பஞ்சகிருத்தியத் தலைவராத லும் பெறப்படும். இதனை

"உலகமளித்தல் சுதந்திரமன் றுவண முயர்த்தோற் கெனவவன்சே
யிலகு முருவம் பொடித்தவன்பா லெழுந்துபடைப்புஞ் சுதந்திரமன்
றலர்மெல் லணையாற் கெனவவனை யரங்கத் திசைமா முகனாக்கிப்
பலரும்வெருவப்பொழிநெய்த்தோர்பயிக்கம்புகுந்தோன்பதம் பணிவாம்

என்னும் திருவானைக்காப்புராணச்செய்யுளாலறிக.

இங்ஙனமாகச் சிவபிரானது முழுமுதற்றன்மைகள் பலவாம். ஆதலின் "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்பும், கேட் பான்புகினளவில்லை" என்றார் பெரியார். ஆயினும் இத்தகைய இருப த்துமூன்று காரணங்களைக் காட்டிச்சிவபிரானே பரம் பொருளென விளக்கி மாதவச் சிவஞான யோகிகள் கட்டளை யிட்டருளிய சுலோக பஞ்சக மொழி பெயர்ப்பி லோரகவலைமட்டும் கூறிமேற்செல்வாம்.

உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்
றசாதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி
னுங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி
னேங்கனைக் கிழவனை யழல்விருந் தாக்கலி
னமைப்பருங் கடல்விட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மாறுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலி
னாழ்கடல் வரைப்பி னன்றே ரநேக

ரன்புமீ தூர வருச்சனை யாற்றவி
ஞன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி
னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேண்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

இனி வழிபடற் பாலர் யாவர்? என ஆராய்வாம்.

எல்லா ஆன்ம கோடிகளும் வழிபடற் குரியனவே. அவற்றுள் ஐயறிவும் நிறையப்பெற்று நல்வினை தீவினை சுவர்க்க நரகமாதிகளை நூலறிவாற் பகுத்தறியும் விசேட வறிவையும் பெற்றுள்ள தேவர் முனிவர் முதலியவர்களும் மனிதரும் வழிபாடியற்ற வேண்டியவர்களேயாம். ஆயினும் மனிதவர்க்கத்தாரே இவ்வழிபாட்டிற்குப் பெரிதும் பாத்தியமுடையவராவர். தேவர்களும் தமது நல்வினைக்கீடாகச் சுவர்க்கபோகம் புசித்துத் தீர்ந்தபின்னர் பூமியில் மானிடராகப் பிறந்து சிவவழிபாடியற்றியே உயர்பதமுறுவர். ஆதலால் பெறுதற்கரியது மானுடப்பிறவியேயாகும்.

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காகவன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்ப
ரூனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தம் ஈண்டுக்கவனித்தற் குரியதாம். அன்றியும்,

303

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப் பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழலிணைக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை"

என்னும் பிரமோத்தரகாண்டச் செய்யுளால் மனிதர்க்கு கண், கால், தலை, கை, நா, செவி, நெஞ்சு முதலாய வுறுப்புக்கள் யாவும் சிவவழிபாட்டிற்காகவே அமைக்கப்பட்டனவென்பதும், அவனுக்குச் செய்யும் அடிமையே அடிமைப்பயன் றரத்தக்கதென்பதும் தெள்ளிது புலனாம். "வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவன்" "கோளில் பொறியிற் குணமிலவே யெண் குணத்தான், றாளை வணங்காத் தலை" என்பன முதலாகப் பெரியார் பணித்தருளுவன பலவுள. ஆதலால் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் தன்மை வாய்ந்த நாம் அனைவரும் சிவ வழிபாட்டிற்கு உரிமை உடையோம். பன்னாள் வழிபட்டும் சிவபிரான் வெளிப்பட்டருளவில்லையே யென்று மலையாது நமது கடமை வழிபடுதல் ஒன்றே யென்பதைத் திடமாகக் கொள்வோமாயின் நமக்கு அருள் செய்து உய்யக்கொள்வது அவன் கடைமையே யாகும்.

"நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பத் திருத்துறைக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே" என்பது சுருதி.

இனி அவனுக்குச் செய்யும் வழிபாடுகள் யாவை? என்பதை யாராய்வாம்.

சிவவழிபாடு விதிமார்க்கம் பத்திமார்க்கம் என இருவகைப்படும். விதிமார்க்கமாவது :—பல நூல்களைக் கற்று அறிவு முதிரப் பெற்று எல்லாப் பொருள்களின் நிலையாமையையும் இறைவனது

நித்தியத்துவத்தையும் உள்ளவாறுணர்ந்து உலகப் பொருள்களிட்த்தே உவர்ப்புக்கொண்டு தத்தம் ஜாதிமுறைகடவாது நின்று நல்லாசிரியனையடைந்து சமய முதலிய தீக்ஷைகளைப்பெற்றுச்சரியையாகிய சிவபணிவிடைகளையும் கிரியையாகிய சிவபூசைகளையும் மனத்தைப் புறம்போகவிடாது சாஸ்திர விதிப்படி செய்துவருதல். இவற்றுள் சரியையாவது ஆலயங்களிலே உருவத்திருமேனியை நோக்கிச் செய்யப்படும் புறத்தொழிலாகிய திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், மலர்மாலைசாத்தல், தீபமேற்றல் முதலியனவாம். இது தாசமார்க்கமெனவும் பெயர் பெறும். கிரியையாவது புறத்தொழில் அகத்தொழில் என்னுமிரண்டானும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்வதாகிய வழிபாடு. இது புது மலர் முதலிய பூஜோபகரணங்களைத் தொகுத்து ஐவகைச் சுத்திசெய்து சிவாசன மூர்த்தி மூலங்களாலே முறையே ஆசனமிட்டு மூர்த்தியை யெழுந்தருளச் செய்து மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவனைசெய்து ஆவாகித்து மெய்யன்பினால் அருச்சித்துத் துதித்து வழிபடுதலாம். இது புத்திர மார்க்கமெனவும் பெயர் பெறும். இன்னும் இவற்றின் விரிமுறையை ஆசாரியர் உபதேசத்தாலறிக.

அகத்தொழில் மாத்திரையானே அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு இயமமுதல் சமாதி யீறாகச் சொல்லப்பட்ட எட்டு வகைப்பட்டு விரிந்துள்ள யோகமாம். இது சகமார்க்கமெனவும் பெயர் பெறும். இந்த மூவகை வழிபாடுகளும் ஞானத்தை யுதிப்பித்தற்கு ஏதுக்களாம். இவற்றானே தான் ஞானம் பிறக்குமென்பர். இது சன்மார்க்கமெனப் பெறும். இனி இவற்றுள் ஒவ்வொன்றும் நன்னான்காய்ச் சரியையிற் சரியை முதல் ஞானத்தில் ஞானம் ஈறாகப் பதினாறு வகையென்று சொல்லப் பெறும். சிவஞான சித்தியார் முதலிய நூல்களில் இவற்றின் விரிவைக் காண்க. ஞானத்தைப்பற்றி வேறு தனியாக விரித்துக் கூறுதும். சிவவழிபாடு செய்யும்போதும் ஜாதிமுறைகடவாது நடத்தல் வேண்டுமோ எனில் கூறுதும். திருநாளைப் போவார் நாயனார் முற்பிறப்பிற் செய்த புண்ணியமிகுதியினாலே சிவபிரானிடத்து மெய்யன்புடையராகியிருந்தும் தாம் புலைபர் குலத்திற் பிறந்திருத்தலால் தம் ஜாதிமுறை கடவாது நின்

305

றே பத்தி செய்யவேண்டு மென்பது கருதி சிவாலயங்கள் தோறும் சென்று பேரிகை மிருதங்கம் யாழ் முதலிய கருவிகட்குத் தோலும் வாரும் நரம்புங் கொடுத்தும், கோரோசனை கொடுத்தும், ஆலயங்களின் திருவாயிற் புறத்தே நின்று ஆடிப்பாடிக் கும்பிட்டு வணங்கி வந்தனர். சிதம்பரத்துக்குச் சென்றபோது நாயனார் தம் இழிகுலப் பிறப்பால் உள்ளே செல்லக்கூடாமைக்கு விசனித்து நகர்ப்புறத்தே வலஞ்செய்து கவலையுடன் துயில்போது சிவபிரானெழுந்தருளிநாளை அக்கினியில் மூழ்கிப் புனிதனாகி உள்ளே வந்து நம்மைத் தரிசிப்பாயாக வெனக் கட்டளையிட்டருள அவ்வாறே செய்து தரிசனை பெற்றுய்ந்தா ரென்று பெரிய புராணங் கூறுமாற்றாற்காண்க.

எத்துணைப் பெரிதான சிவவழிபாட்டைச் செய்யினும் மனம் வேறொன்றிற் செல்லாவாறு அழுந்திய நிலையிலிருந்து செய்தாலன்றிப் பயனில்லை. சிந்தை வேறுபட்ட செயல் தீங்கே பயக்கும். இதனை

> கொந்தலர் கொய்யும் போது கூர்விழிமையலாலே
> பைந்தொடி மடவார் தம்மைப் பார்த்தலாற் கைலைவெற்பிற்
> சுந்தரன் பட்ட காதை யறிதிரோ துணர்மென் போதால்
> அந்தணர் கீழ்க ளாவார் கீழ்களந் தணர்க ளாவார்.

என்னும் புட்பவிதிச் செய்யுளாலும், நக்கீரதேவர் சரவணப் பொய்கைக் கரையிலிருந்து சிவபூசை செய்துகொண்டிருக்கும் போது காற்றால் விழுந்த ஓர் ஆலிலையானது பாதிநீரிலும் பாதிகரையிலுமாகப்பட்டு நீரில் பட்டபாதி மீன் வடிவாகிப் புனற்குள்ளிழுப்பக் கரையிற் பட்ட பாதி பக்ஷிவடிவாகி மேலேயிழுப்பக்கிடப்ப, சிவ பூசை செய்துகொண்டிருந்த நக்கீரதேவர் அந்த ஆச்சரியத்திலே மனஞ்செலுத்தினர். சிவ பூஜாகாலத்து வேறொன்றில் மனஞ் செலுத்தியதனால் உடனே அவண் ஒரு பூதம் வந்து அவரைத் தூக்கிச் சென்று மலைக்குகையுள் முன்னமே தன்னாலிங்ஙனம் வைக்கப்பட்ட தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதின்மருடன் சேர்த்து வைத்ததும், தேவர் முருகக்கடவுள்மீது திருமுருகாற்றுப்படைபாடி அப்பூதத்தை வென்று மீண்டதுமாகிய பிரசித்த சரித்

திரத்தாலும் நன்குதெளிக. கைலாசவாசியாகிய ஆலால சுந்தரரும் மெய்யடியாராகிய நக்கீரதேவருமே சிவவழிபாடு செய்யுங்கால் சிந்தனை சற்றே புறம்பான குற்றத்திற்காக இப்பாடுபடுவார்களா யின் ஏனையர் விஷயத்தில் சொல்லவேண்டுவதின்றே! இங்ஙனம் வேதாகமாதிகளில் கூறப்பட்ட விதிவழுவாது சிவபணி செய்வது விதிமார்க்கம் எனக் கொள்க.

பக்திமார்க்கமாவது:—முற்பிறவிகளிலே விதிமார்க்கந்தவறுது சிவவழிபாடு செய்து சிவனிடத்தே செலுத்திவந்த மெய்ப்பத்தி முதிர்ச்சியாலே செய்யத்தகுவதின்னது செய்யத் தகாததின்னது என்ற பாகுபாடு கருதாது பரவசப்பட்டுச் சிவபிரானுக்குப்பணிசெய் தலாம். கண்ணப்பநாயனர் இந்தப் பக்திமார்க்கத்தே செல்லப் பெற் றவராதலின் விதிநிஷேதமாக இவர் செய்த மாமிசநிவேதனுதி எல் லாச்செயல்களும் சிவபிரானுக்கு இனியவாயின. மனமானது தன்னை மறந்து தலைவன் வசப்பட்டு நிற்கும்பொழுது நிகழும் செயல்கள் தான் பத்திமார்க்க மெனப்படுமாதலின் இந்நிலையில் நின்றோர் செயலை ஏனையர் பின்பற்றியொழுகல்கூடாது.

"வெள்ளமிகுத் தேரிநடு வுடைத்தோடி னதுகலிங்கா விடுகிலாரப்
பள்ளமடைத் திருபுறத்துங் கடைவிடுவ ருலகோரப் பரிசுபோல
வுள்ளமிகுத் தறிவெழலாற் பத்திமிகுத் தமையாமொன் றொருவர்
செய்யிற், றெள்ளுணர்வோ ரதனைவிதி யென்றுபின்னும் புரிகுவ
ரோ தெளிவி லோயே"

என்னும் செய்யுளும் இக்கருத்தையே வலியுறுத்துமாறுணர்க. இங்ஙனமாக இருவகை மார்க்கத்துள் எந்த மார்க்கத்தைப்பற்றி நின்று வழிபாடு செய்யினும் அது நமது கடமை யென்பதுமட்டுங் கருதிச் செய்யவேண்டுமே யன்றி யாதொரு பலனையும் இச்சித் துச்செய்தல் கூடாது. அதுதான் உத்தமசிவவழிபாட்டின் முக்கிய இலக்கணம். இறைவன் ஆண்டான், நாம் அடிமை, ஆதலால் அவனு க்கு நாம் எக்காலத்தும் வழிபாடுசெய்யும் கடமையுடையோம் என்ற எண்ணத்துடனே பணிசெய்யவேண்டும். இங்ஙனமே வழி பாடு செய்யவேண்டுமென்பதை

"கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்."

என்னும் பெரியபுராணத் திருப்பாசுரத்தானுங் காண்க.

இனி வழிபாட்டால் அடையும் பயன்என்ன? என்பதையாராய்வாம்.

அவரவர்செய்த வழிபாட்டின் தகுதிக்கேற்ப இம்மையில் அரசனுதலும், மறுமையில் இந்திரபதவி, பிரமபதவி, விட்டுணுபதவி முதலியவைகளை யெய்தலும் சிவ வழிபாட்டினலேயாம். "வேண்டுவார் வேண்டுவதே யீவான்கண்டாய்" எனலால் எவ்வெவர்எதனை விரும்பினர்களோ அவ்வவர்க்கு அதனைக் கொடுத்தருளுவர்.

"வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனுச் செய்தனையே"

"வண்டுளருந் தண்டுளாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்"

என்பன வாதிய திருப்பாசுரங்களால் பூதலவரசனுகவும், இந்திரனுகவும், பிரமனுகவும், விட்டுணுவாகவும் செய்விப்பது சிவவழிபாடாமென்பது காண்க. தேவ தேவனுகிய சிவபிரானை வணங்கியபின்பு அச்சிவபிரான் யாது செய்வரெனில் தன்னைத்தொழுத தொண்டர்களை, முன்னர் அவராற் றொழப்பெற்ற மற்றத் தேவர்களெல்லாம் வணங்கத்தக்க உயர்பதவியிலிருத்தியருளுவர்.

"முழுத்தழன் மேனித் தவளப் பொடியன் கனகக்குன்றத்
தெழிற்பரஞ் சோதியை யெங்கள் பிரானை யிகழ்திர் கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு வானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம் மாற்றொழு விக்குந்தந் தொண்டரையே"

என்ற தமிழ்வேதவாக்கு மிகப்பாராட்டற் குரியதாம். இவைகளெல்லாம் காலாந்தரத்தில் மாறத்தக்க பதமுத்திகளே யாதலின்,

இவற்றிற்குமேலாயதும், இரும்புண்டநீரும், சமுத்திரத்தையடுத்த நீரும் திரும்ப வாராததுபோலமீளாவண்ணம் அப்புஅணைந்தஉப்புப் போல ஆன்மா இறைவனைச்சார்ந்து கால் × தலை-காறலை, தாள் × தலை-தாடலை என்றபோது றகர டகரங்கள் ஒரெழுத்தென்றும் ஈரெழுத்தென்றும் சொல்லமுடியாமல் இருப்பதுபோல் அத்துவிதமாகின்ற முத்தியின்பமும் தரவல்லது இச்சிவவழிபாடேயாம். சரிதைத்தொண்டருக்குச் சிவசாலோகமும், கிரியைத்தொண்டருக்குச் சிவசாமீபமும், யோகருக்குச் சிவசாரூபமும், ஞானத்தவர்க்குச் சிவசாயுச்சியமும் முறையே பயனென்பர்.

சிவபிரான் தன்னடியார்களது உடல்பொருளாவிகளைஎன்றுகொண்டு அவர்களைத் தன்மயமாக்கியருளுவதை

"அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாங்
குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்கணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ வதற்கு நாயகமே"

என்னும் மணிவாசகப் பெருமான்றிருவாக்காலறிக. இங்ஙனம் உடல் பொருளாவிகளை இறைவன் என்று கொள்ளினும் அவற்றால் இறைவற்கோர் பயனுமில்லை யெனவும், இறைவனைப்பெற்ற நான் அளவற்ற நிரதிசய இன்பமெய்துகின்றனன் எனவும் அந்த மணிவாசகப் பெருமானே வியந்து பாராட்டிக்கூறும் அருமையை

"தந்த துன் றன்னைக் கொண்ட தென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரர், அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன் யாது நீ பெற்ற தொன் றென்பாற், சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான் றிருப்பெருந் துறையுறை சிவனே, யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா யானித் கிலனேர்கைம் மாறே"

என்னுந் திருப் பாசுரமே யினிது விளக்கும்.

இதனால் இறைவன் ஆன்மாக்கட்குச் செய்யும் பேரருளானது கைம்மாறு கருதாத பெருந் தன்மையதேயாம். உலகில் உற்றுழியுதவிக்காக்கும் கருணையில் தாயானவள் குழந்தைக்குச் செய்யும் தண்ணளியே மிகப் பாராட்டற்பாலது. குழந்தையின் பக்குவத்துக் கேற்ற

3309

வாறு காலமறிந்து பாலும் கஞ்சியும் சோறும் முதலியன கொடுத்து வளர்க்கின்ற மாதாவின் றண்ணளியைப் புகழாதாரில்லை. அத்தாயின் றண்ணளியினுஞ் சிறந்த பேரருள் சிவபிரானுடைய தென்பதைப் பற்றி அந்த மணிவாசகப் பெருமானே ஒருதிருப்பாசுரத் தாலினிது விளக்குகின்றார். எங்ஙனமெனில்,

"பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய, வூனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி யுலப்பிலா வானந்த மாய, தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவ பெரு மானே, யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே னெங்கெ ழுந் தருளுவ தினியே"

என்பதாம். இத்திருப்பாசுரத்தின் பொருளருமையைச் சற்றே விசாரிப்பாம்.

தாயானவள் குழந்தை பசியால் அழும்பொழுது அக்குரல்கேட்டு அதன் பசிப்பிணியை நீக்க நினைந்து அன்புடன் பால் ஊட்டுவள். (நினைந்து என்றதால் அந்நினைவில்லாதகாலமு முளதென்றுகொள்ளக் கிடக்கின்றது.) பதிப்பொருளாகியநீபாசப்பிணியால்வாடும்போது மிக வும் தண்ணளியுற்று தன்னையுணர்ந்து அழைக்கும் அறிவாற்றலில்லா திருப்பவும் தானே வலியவந்து தண்ணளிசெய்தலின் 'சாலப்பரிந்து' எனவும், தாய்கொடுத்த பாலால்வரும் மகிழ்ச்சி சிறிது நேரத்திலழி யும், நீயருளும் இன்பமோ எக்காலத்தும் அழியாது. ஆனதுபற்றி "உலப்பிலா ஆனந்தம்" எனவும். ஒருநோயாளிக்கு முதலில் ஒருவயி த்தியன்வந்து எதாவது மருந்து கொடுத்திருப்பின் பின்புவரும் வயி த்தியன் முன்புவந்த வயித்தியன் கொடுத்த மருந்துக்கு விரோத மில்லாத மருந்தை யறிந்து கொடுக்கவேண்டும், அங்ஙனங் கருதிச் செய்யா வழித் தீங்குவிளையும். ஆதலின் முன்னே தாய்கொடுத்தது பால்ஆனதால் அதற்கு விரோதமில்லாமை கருதியே "தேனினை" என வும், தாய்கொடுத்தபாலைக் குறிப்பிடுமிடத்து அதன்சிற்றளவுகருதி "ஊட்டி" என்றமையால், இவண் ஆனந்தத்தேனின் அளவின்மை யைக் குறிப்பிக்கவே "சொரிந்து" எனவும், தாயானவள் குழந்தை யின் நற்குண தீக்குண பாகுபாடறியாத காலத்தே அக்குழந்தை நற்குணமுடையனாகிப் பிற்காலத்தே தன்னைப் பரிபாலிப்பான்என்று

கைம்மாறுகருதியே தண்ணளி செய்கின்றுள். நீயோ யான் பாசபந்தப் பிணிப்புற்ற பாவியேனுயினேன் என்பதையும் என்னுல் உனக்கு எக்காலத்தும் யாதானுமோர் சிற்றுபகாரமு மில்லை யென்பதையும் தெரிந்தும் பேரருள் செய்தாய் என்பதைக் குறிப்பிடவே "பாவியேனுடைய" எனவும், தாய்கொடுத்த பால் வரவர ஊனைப் பெருக்கும். ஊன் பெருக்கலால் யாதொரு நலனும் பெறக் கூடியதில்லை. நீகொடுத்தருளும் ஆநந்தத்தேனே ஊனையும் உருக்குவதாகின்றது. உருக்கம் பயத்தலால் எல்லாநலனும் எய்தப் பெறலாம் எனக்குறிப்பித்தற்கே "ஊனினை யுருக்கி" எனவும், தாய்கொடுத்த பால் ஊனைப் பெருக்குதலால் ஞானத்தைச் சுருக்குவதேயாகும், நீகொடுத்த ஆனந்தத் தேனே ஞானத்தைப் பெருக்குவதாகின்றது எனக் குறிப்பிடற்கே "உள்ளொளி பெருக்கி" எனவும், தாயானவள் குழந்தைவீட்டின்உள்ளே யிருக்கும்போது மட்டும் அதனை யருகிருந்து காப்பாளன்றி அது செல்லு மிடங்களிலெல்லாம் உடன் சென்று பரிபாலிக்கும் தன்மையுடையளல்லள்,நீயோ யான்எவ்வெவ்வுலகங்களில் எவ்வெப்பிறவிகளில் சென்றாலும் அங்கெல்லாம் என்னைவிடாது தொடர்ந்துவந்து காத்தருளுகின்றாய் எனக்குறிப்பிடுதற்கே "புறம்புறந்திரிந்த" எனவும்; தாயானவள் குழந்தைவேண்டியதை யெல்லாம் கொடுக்கத்தக்க வளல்லள், எல்லாப்பொருள்களும் உடையவளுமல்லள், நீயோ வேண்டுவார் வேண்டுவ வுதவும் வள்ளன்மையும் எல்லாப்பொருள் கட்கும் தலைவனுதற் றன்மையுமுடையாய் என்பதைக் குறிப்பிடுவதற்கே "செல்வமே" எனவும், தாயானவள் இவ்வுலகத்தும் வேண்டியவற்றை யளிக்குந் தரத்தின ளல்லளாகவே மறுமையின்ப மோக்ஷ வின்பங்கள் விஷயத்தில் அவளைப்பற்றி நினைத்தற்கு மிடமில்லை; இம்மை மறுமையின்பங்களை யெல்லாம் கொடுத்தருளுவது மட்டிலமையாது நிரதிசய இன்பத்தையும் கொடுத்தருளுந்தன்னிகரில்லாத் தலைவனுகின்றாய் நீ என்பதைக் குறிப்பிடுதற்கே ஏனை நாமங்களைக்கூறாது "சிவபெருமானே" எனவும், மார்ச்சால நியாயமாக நீயே என்னைத் தொடர்ந்து அருள் செய்பவனுகவும் இப்பொழுது மர்க்கட நியாயமாக நானே உன்னைத்தொடர்ந்து அழுத்தமாகப் பிடித்துக்கொண்டேன் என்பது விளக்கவே, "யானுனைத்தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்" எனவும், வலியவந்து பற்றியாட்கொள்ளுகின்றவனுகிய நின்னை நானேவந்து அழுந்தப் பிடித்துக்

கொண்டே னாதலின் இனி என்னைவிட்டு யாண்டும் எழுந்தருள முடியாது. எளியேனுள்ளமே கோயிலாக வீற்றிருந்தருள வேண்டுவது தான் என்பது விளக்கவே, "எங்கெழுந்தருளுவ தினியே" எனவும் கூறியருளினாரென்று ஒருவாறு பொருள் காணக்கிடக்கின்றது. இன்னும் இதன் பொருளருமைப் பெருக்கத்தை வல்லார் வாய்க் கேட்டுணர்க.

இதுகாறுங் கூறியவாற்றால் சிவவழிபாடு செய்தலால் இம்மை மறுமை வீடு ஆகிய எல்லாப்பலன்களுஞ் சித்திப்பனவாகுமென்பது பெறப்படுமாறு காண்க.

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தமிய னேற்கே.

கண்பனியரும்பக்கைகண்மொட்டித்தென்களைகணேயோலமென்றோலிட்
டென்பெலாமுருகுமன்பர்தங்கூட்டத்தென்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன்பாடிநின்றாடப்பனிமலர்ச்சோலைசூழ்மொழுப்பிற்
செண்பகமரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்திருவளர் திருச்சிற்றம்பலமே.

நெறிப்படு மகத்திற் றூய்மை நிகரிலாத் தூய்மை யாகும்
புறத்தினிற் றூய்மை தூய்மை யன்றுளம் பொருந்த வுன்னித்
திறப்படச் சேவை செய்தல் சேவையாந் தியானி யாது
முறைப்படச் சேவை செய்தல் சேவையன் றுமான் முன்னில்.

புதியுமோ கத்தான் மானத்தான் மருளாற்பற்றியசார்பினாலுன்னைத்
துதிசெயா திகழ்வோ ரிகழுக கலைசைச் சுந்தரா சிதம்பரே சுரனே
மதிபொதிசடைபாயாங்களெல்லோமும்வழிவழியுன்னடித்தொழும்பே
நிதியெனவுடையேமென்றுமிக்கருத்தேதிலைபெறச்செய்துகாத்தருளே.

கண்ணுவா ரேனுமுனைக் கைகுவியா ராயினந்த
மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே.

பத்திராதிபர்.

கல்விப்பயன்.

(286-ம் பக்கத் தொடர்ச்சி).

"கல்வி யுடைமை பொரு ளுடைமை யென்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும்"

என்றபடி கல்விப் பொருள் செல்வப் பொருள்கள் என்னுமிரு பொருள்களிருப்பினும் கல்விப் பொருளே சிறப்புடைத்தாம். செல்வப் பொருளைத் தேடுவதென்றாலுந் துன்பம். துன்பப்பட்டுத் தேடிய பிறகு வைத்துக் காத்தல் செய்வதுந் துன்பம். அல்லாது, அழித்து விடுவதுந் துன்பம். ஐயோ! பிறரிடத்தில் இழந்து விடுவதும் துன்பமன்றோ? எனவே

"இன்ன றரும்பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்ன
தழித்தலுந் துன்பமே அந்தோ! பிறர்பா
விழத்தலுந் துன்பமே யாம்"

என்ற வெண்பாவானறியலாகும். என்னினும் முற்றும் செல்வப் பொருள் வேண்டியதில்லை யென்னுங் கருத்தல்ல.

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்"

என்றானதால், செல்வப் பொருளுக்குப் பாடுபடும் நேரமொழிந்த மற்றைய நேரங்களிலாயினும் வாழ்நாளை வீணாளாக்காமல் கல்வி முதலியவைகளில் காலம் போக்கலாமன்றோ? ஆனதால், மாந்தர்கள் தேடிக்கொள்ளவேண்டிய பொருள்களில் கல்விப் பொருளைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பது அத்யாவசியம்.

கல்வியைக் கற்கவேண்டிய தவசியமென்று பொதுப்படச் சொன்னாலும், கற்கவேண்டிய நூல்களைக் கற்றல். அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்படும் நான்கு புருஷார்த்தங்களைப் போதிக்கும் நூல்களைக் கற்றல் வேண்டும். நந்தமிழ் நாட்டில் புலவர்கள் எண்ணிறந்தவர்களாயினும், மெய்ப்புலவர்கள் சிலரும், பொய்ப்புலவர்கள் பலருமாகவிருக்கிறார்கள். இவர்களில் உயி

ருக்கு உண்மைப் பொருளைப் போதிக்கும் புலவர்களை மெய்ப்புலவர்களாவார். ஒருவாறு எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு வாயில் வந்ததெல்லாம் பாட்டு என்று பாடிக்கொண்டு நாடக மாத்திரையாய் நடிப்பவர்களே பொய்ப்புலவர்களாவார். இவ்விஷயத்தை,

"குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
யெட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
யிரண்டொன்றாய் முடிந்துதலை யிரங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெல்லாம் புலவரெனத் திரிய லாமே"

என்னும் செய்யுளால் தெரிந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட பொய்ப் புலவர்களால் பாடப்படும் சிற்றின்பப் பாட்டுக்களைக் கற்று நம் சிறுவர்கள் கெட்டுப் போவது பிரத்தியக்ஷம். அவர்களிலும், சிலர், உலகத்திற்கு நன்மை பயக்குமென்று கருதி, சிற்றின்பக் கதைகளால் நாவல்கள் என்று சொல்லப்படும் கட்டுக்கதைகளை யெழுதுகிறார்கள். நம்சிறுவர்களோ அவற்றிலுள்ள நீதியை விட்டுச்சிற்றின்ப விஷயத்தைக் கவனித்துக் கெட்டுப் போவதையும் நாம் கண் கூடாகப்பார்க்கிறோம். அவர்கள் கற்றுக்கொண்ட கல்வியின் பயன் இன்னதென வெளிதிற் றெரிந்து கொள்ளலாம்.

கல்வியானது தலைவாயின் கண்ணும், உறவினர் முதலியவர்களுக்கும், நல்ல புகழைக் கொடுக்கும். தருமார்த்த காமமோக்ஷமெனனும் நான்கு புருஷார்த்தங்களையுங் கொடுக்கும். துன்ப நேரிட்டபோது தக்க வுதவி செய்து அத்துன்பத்தினின்று நீக்குமாதலால், சிற்றறிவைப் படைத்த மாந்தர்கட்குக் கிடைக்கக் கூடிய நல்ல துணையானது கல்வியைக் காட்டிலும் பிறிதொன்றில்லை யென்று பொருள்படும்படி பாடியருளிய,

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."—என்பதாலும்,

செல்வப் பொருளானது வெள்ள முதலியவைகளால் அழியும். கல்விப் பொருள் அழியாது செழிக்கும். செல்வப் பொருள் அக்கினியால் வெந்துவிடும். கல்விப் பொருள் வேகாது முந்தவிடும். செல்வப் பொருள் அரசர் முதலியவர்களால் கொள்ளப்படும். கல்விப் பொருளால் சகல விஷயங்களும் விள்ளப்படும். செல்வப் பொருள் பிறருக்குக் கொடுக்க குறைவுபடும். கல்விப்பொருள் பிறருக்குக் கற்பிக்கக் கற்பிக்க நிறைவுபடும். செல்வப் பொருள் கள்ளர் முதலியவர்களால் கொள்ளை யிடப்படும். கல்விப்பொருளோ துஷ்டச் செய்கையினின்றும் நீக்கும். செல்வப் பொருளைக் காத்தல் செய்யப்பயமுண்டு. கல்விப்பொருளால் எல்லாவற்றிற்கும் ஜெயமுண்டு. ஆதலால், என்று மழியாத கல்விப் பொருளைத் தேடும் பொருட்டு மனமாகிய கருவி நம்மகத்திலிருக்க, செல்வப் பொருளைத் தேடும் பொருட்டு வெளிச்சென்று முயல்கிறார்களே என்று 'பொருள்படும்படி பாடிய,

'வெள்ளத்தா லழியாது வெந்தழலால் வேகாது வேந்த ராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலு நிறைவன்றிக் குறைவுறாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ மிகவெளிது கல்வி யென்னும்
உள்ளத்தேபொருளிருக்கப்புறம்பாகப்பொருள்தேடியுழல்கின்றாரே'

என்னும் செய்யுளாலேயும், மணலைத் தோண்டுந்தோறும் நீரைச் சுரந்துகொண்டிருப்பதுபோல, கல்வியைக் கற்குந்தோறும் அறிவானது விருத்தியாகும் என்புதற்கேற்க,

> "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறு மறிவு"

என்பதாலும், குற்றமில்லாத விழுமிய கல்வியைத் தவிர ஒருவற்கு மாண்புடைய பொருள் வேறொன்றிவ்வுலகிலில்லை. அதாவது,

> "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடல்ல மற்றை யவை"

என்பதாலும், அரசவுரிமைபூண்ட அரசனையும், கல்வியைக் குற்றமறக் கற்ற வித்துவானையும், ஒப்பநோக்கின் வித்துவானே மேலானவன். எப்படி யெனில், அரசனானவன் தன்னுளுகைக் குட்பட்ட தேசத்திலல்லாது மற்றைய தேசங்களில் சிறப்படைய மாட்டான். கற்றவன் எத்தேசத்தில் சென்றாலும் சிறப்படைவான் என்றபடி

"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு."

என்ற வெண்பாவானும், ஒருவன் நல்ல நூற்களைக் கற்றுத் தேறுவானாயின், தன்னிடத்திலுள்ள பேதைமையானது நீங்கும். நீங்கவே ஈனச்சிந்தையகலும். பின்னுலகத்தின் இயற்கையை யுணருவன். உணர்ந்து, உண்மையாகிய வழியில் அல்லது ஞானமார்க்கத்திற்சென்று இம்மையிலே தன் புகழை இவ்வுலகத்தில் நிலைநாட்டுவான். நாட்டுவதோடும் மறுமையில் எல்லா உலகத்திலேயும் உயர்ந்த முத்தியுலகத்தை யடைவான் என்பதே.

கற்பக் கழிமட னஃகு மடனஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங்—கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பா
லுயர்ந்த உலகம் புகும்" என்ற

வெண்பாவானும், இம்மையிலே நன்மையைப் பயக்கின்றபடியாலும் மற்றையோர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாத் தன்மையாலும், தன்னையுடையானை நல்வழியிற் செல்லச் செய்து பிரகாசிப்பிக்கின்றதனாலும், தன்னையுடையவனுக்குத் தெரியாமல் நேரிடுங் கொடுமையொன்றில்லை யாதலானும் பேதைமையாகிய வியாதியை அடியோடு அகற்றுவதற்கு அவுஷதம் கல்வியைப்போல் எந்தவுலகத்திலும் யாங்கண்டோமில்லை எனத் தோன்ற

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுணராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்ம ரறுக்கு மருந்து" என்று

பாடியருளிய மொழியாலும் தெளியலாம். இன்னும் இவைபோல் அநேகமாகிய பயனை விளக்குமாதலால் மாந்தர்கள் கல்வியைக் கடைப்பிடித்தல் ஆவசியகம்.

சு. பாலசுந்தரமுதலியார்,

ஆக்கூர், மாயவரந்தாலூகா.

தேவகோட்டை வைசிய சிவாநந்த சபையின் முதல்-௵ பூர்த்திக் கொண்டாட்டம்.

செல்வப் பெருக்கமும் சிவநேயச் சிறப்பும் நிறையப் பெற்றுள்ள தேவகோட்டை வைசிய சிவாநந்த சபையின் முதல்-௵ பூர்த்திக் கொண்டாட்டமானது நிகழும் பிரமாதீச வருஷம் தை௴ ௮, ௯, ௧௦ ௳களில் மிகவும் சிறப்பாக நிறைவேறியது. அயலிடங்களிலிருந்து வந்திருந்த வித்துவான்களையும் ஏனைய அபிமானிகளையும் இச்சபையார் நன்கு உபசரித்தார்கள். சபை கூடியவுடன் தொடக்கத்திலும் இடையிலும் முடிவிலும் தேவாராதி தமிழ்வேத பாராயணம் இனிய இசையுடன் செய்யப்பெற்றது. இச்சபையார் மிகவும் ஊக்கமும் உற்சாகமுங் கொண்டு நடத்தினார்கள். இறைவன் றிருவருளால் எல்லா வகையினும் சிறப்பாகவே நிறைவேறியது. இனி சபையில் நடந்த உபந்யாசங்களையும் உபந்யாசகர்களையும் தெரிவிப்பாம்.

௮௳ மாலை 6மணிக்குச் சபைகூடியது. நகரத்தார்களும் பிறருமாகச்சுமார் 500 பேர்வரை கூடினார்கள். மதுரை ஐக்கோர்ட்டுவக்கீல் ப்ரும்ம-ஸ்ரீ வி. ராமச்சந்திரய்யரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். சபையின் முதல்-௵ அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பெற்றது. மதுரை ஸ்ரீமத். சுந்தரபாண்டிய வோதுவாரவர்கள் "மெய்யடியார்" என்பதைப்பற்றியும், தேவகோட்டை வித்துவான் ஸ்ரீமத். சொ. வேலுச்சாமிக் கவிராயரவர்கள் "முயற்சி" என்பதைப்பற்றியும் உபந்யசித்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் முடிவுரை கூறியதுடன் "வருங்காலநிலை" என்பதைப்பற்றி உபந்யாசமும் செய்து முடித்தார்கள்.

௯௳ காலை 9மணிக்குச் சபைகூடியது. மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனவித்துவான் ப்ரும்மஸ்ரீ மு. கோவிந்தசாமியய்யரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்ப் பத்திராதிபராயிருந்தவரும் இப்போது அகராதிக் கமிட்டியில் வித்துவானாக இருப்பவருமான ப்ரும்மஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் "கற்குமுறை" என்பதைப்பற்றி உபந்யசித்தார்கள். ஆத்தங்குடி விவேக விளக்க வித்தியாசாலை மாணவர்கள் "சைவ சித்தாந்தக்கோர்ட்டு" என்னும் பெயரிட்டு * புலான் மறுத்தலைப் பற்றி வாதப் பிரதிவாத நியாய தர்க்கமுறையில் நாடகரூபமாக நடத்திக்காட்டினர். அக்கிராசனாதிபதியவர்கள் இரண்டிற்கும் நல்லபிப்பிராயங்கூறி முடித்தார்கள்.

அன்றுதினம் மாலை 4-30க்கு மறுபடி சபைகூடியது. மகிபாலன் பட்டி வித்துவான் ஸ்ரீமத். மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். சொக்கலிங்கம் புத்தூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தமிழ்ப் போதகர் ப்ரும்ம-ஸ்ரீ ரெ. ராமமூர்த்தியையாவர்கள் "மனத்தூய்மை" என்பதைப்

---

* இந்த விஷயம் சென்ற ௵ வித்தியாபாநுவிலும் வைசிய மித்திரனிலும் மகிபாலன்பட்டி ஸ்ரீமான் மு. சின்னையா செட்டியாரவர்கள் எழுதியவற்றைப் பீடிகையாகக் கொண்டுள்ளது.

பற்றியும், மதுரை மு. ரா. கந்தசாமிக்கவிராயர் "வாய்மை" என்பதைப்பற்றியும், மதுரை வித்துவான் ப்ரும்ம-ஸ்ரீ ந. சுந்தரேசய்யரவர்கள் "புராணப்பயன்" என்பதைப்பற்றியும், அக்கிராசனதிபதியவர்கள் "ஆண்டானடிமைத் திறம்" என்பதைப்பற்றியும், மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனவித்துவான் ப்ரும்ம-ஸ்ரீ மு. கோவிந்தசாமியய்யரவர்கள் "அன்பு" என்பதைப்பற்றியும் உபந்யசித்தார்கள். அக்கிராசனதிபதியவர்கள் தமது உபந்யாசந்தவிர ஏனைய உபந்யாசங்களை வியந்து முடிவுரை கூறினார்கள். அக்கிராசனதிபதியவர்கள் உபந்யாசத்தை வியந்து இரண்டு வித்துவான்கள் இரண்டு செய்யுட்களியற்றி யுரைத்துப் பொருள் கூறினார்கள். அவை வருமாறு:—

கோனப்பட்டு கற்பகவிநாயக கலாசாலைத் தமிழ்ப்போதகாசிரியர் ப்ரும்ம-ஸ்ரீ. அ. கோபாலையரவர்களியற்றிய செய்யுள்.

வைசியசி வானந்த வான்சபையே வான்சபையாம்
வைசியரு மற்றவரும் வானவர்கள்—பெய்சுவைய
வானமுத நற்புலவர் வார்த்தை கதிரேசன்
வானவர்கண் மேவுசபை மன்.

வலயபட்டி விநாயக வித்தியாசாலைத் தமிழ்ப் போதகாசிரியர் ப்ரும்ம-ஸ்ரீ கெ. திரு. இராமசாமியய்யங்காரவர்களியற்றிய செய்யுள்.

தூண்டா விளக்காய்த் துலங்குகின்ற கீர்த்திசேர்
ஆண்டா னடிமைத் திறத்தை யறைந்தனனால்
சேராரு மன்பாற் செவிகொடுத்துக் கேட்கமிகு
நாரார் கதிரேச னன்கு. என்பனவேயாம்.

கoஉ காலை 9-மணிக்கு சபை கூடியது. மதுரை மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அக்கிராசனம் வகித்தனர். வலயபட்டி விநாயக வித்தியாசாலைத் தமிழ்ப் போதகாசிரியர் ப்ரும்ம-ஸ்ரீ கெ. திரு. இராமசாமியய்யங்காரவர்கள் "ஒப்புரவறிதல்" என்பதைப்பற்றியும், ஆத்தங்குடி விவேக விளக்க வித்தியாசாலைப் போதகாசிரியர் ப்ரும்ம-ஸ்ரீ சுப்பராமய்யரவர்கள் "நமது கடமை" என்பதைப் பற்றியும், கோனபட்டு கற்பக விநாயக கலாசாலைப் போதகாசிரியர் ப்ரும்ம-ஸ்ரீ அ. கோபாலையரவர்கள் "பக்தி" என்பதைப்பற்றியும் உபந்யசித்தார்கள். அக்கிராசனதிபதியவர்கள் முடிவுரையுடன் நிறைவேறியது.

அன்று தினம் மாலை 3-30க்கு மறுபடியும் சபைகூடியது. மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனதிபதி ப்ரும்ம-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். தேவகோட்டையில் வந்திருக்கும் யாழ்ப்பாணம் வித்துவான் ஸ்ரீமத். நாகலிங்கம் பிள்ளையவர்கள் "சிவாலயதத்துவார்த்தம்" என்பதைப்பற்றியும், தேவகோட்டை ஸ்ரீமான் அரு. அரு. சோம.

அருணசலஞ்செட்டியாரவர்கள் "சிவலிங்க வழிபாடு" என்பதைப்பற்றியும் உபந்யசித்தார்கள். ஸ்ரீமாந். அருணசலஞ்செட்டியாரவர்கள் உபந்யாசத்தை வியந்து பாராட்டி மதுரை மு. ரா. கந்தசாமிக்கவிராயர் ஒரு வெண்பாக்கூறிப் பொருள் விரித்துரைத்தனர். அதுவருமாறு:—

கருவிற் றிருவுடைமை காட்டும்பல் செல்வப்
பெரியனருணசலப்பேர் பெற்றான்—றிருவளர்க்கு
மீசன் வழிபாட் டிலக்கணஞ்சொற் றனனாளத்தி
னேசம் பெருக நினைந்து. என்பதே.

அக்கிராசனாதிபதியவர்கள் உபந்யாசங்களையும் செய்யுளையும் பற்றித்தம் நல்லபிப்பிராயங் கூறியதுடன் "பெரியாரியல்பு" என்பதைப்பற்றி யுபந்யசித்து முடித்தார்கள்.

அன்றுதினம் மாலை 6-மணிக்கு மறுபடியும் சபைகூடியது. தேவகோட்டை டிப்டிக் கலெக்டரவர்கள் ப்ரும்ம-ஸ்ரீ இராமச்சந்திரய்யரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். ஆத்தங்குடி விவேக விளக்க வித்தியாசாலை மாணவர்கள் "சைவ சித்தாந்த ஐக்கோர்ட்டு" என்னும் பெயரிட்டு கூவகாலையில் நடத்தியபடி சிறிது மாறுதலுடன் புலான் மறுத்தலைப்பற்றிய நாடகம் நடித்தார்கள். மகிபாலன்பட்டி ஸ்ரீமாந் மு. சின்னையாசெட்டியாரவர்கள் "இராசவிசுவாசம்" என்பதைப்பற்றி உபந்யசித்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் மேல்நடந்த வற்றைப்பற்றித் தம் நல்லபிப்பிராயங் கூறியதுடன் தெய்வபக்தி ராஜபக்தி மனித விசுவாசம் ஜீவகாருண்யம் என்பவைகளைப்பற்றி "அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம்" என்ற திருவாக்குக்களைப் பீடிகையாகக்கொண்டு தெளிவாகவும் இனிமையாகவும் பேசி முடித்தார்கள். சபையார் வேண்டுகோட்படி மகிபாலன் பட்டி வித்துவான் ஸ்ரீமத். மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கிராசனாதிபதி யவர்கட்கும் மற்ற வித்துவான் கட்கும் ஏனையர்க்கும் வந்தனோபசாரங் கூறினார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் மீது வலயபட்டி விநாயக வித்தியாசாலைப் போதகாசிரியர் ப்ரும்ம-ஸ்ரீ ந. திரு. இராமசுவாமியையங்காரவர்கள். ஒரு வெண்பாக் கூறினார்கள். அதுவருமாறு:—

தேறுஞ் செழுந்தமிழைத் தித்திக்கப் பேசுமவர்
வீறுபெறத் தேவையுறு மேலவைக்கண்—கூறுபுகழ்
நற்றலைமை வாய்ந்து நனிசிறந்தான் ராமசந்த்ர
நற்றவனன் னீதியந்த ணன். என்பதே.

கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றது. வித்துவான்கட்கெல்லாம் சபையோர் பூமாலை புனைந்தார்கள். சபையாரனைவர்க்கும் சந்தன தாம்பூலாதிகளால் உபசரிப்பு நிகழ்ந்தது. இவ்வளவில் முதல்-வருஷ பூர்த்திக் கொண்டாட்டமானது நன்றாக நிறைவேறியது.

இனி 26-1-14ல் வெளிவந்த வைசியமித்திரன் பத்திரிகையின் தலையங்கத்து இவ்விஷயத்தைப் பற்றி எழுதியிருப்பதில் இம்மூன்று தினங்களிலும் சபை நடந்த வகையில் சில குறைபாடுகள் கூறப்பட்டுள்ளன. அவ்விதம் கூறப்பட்ட குறைபாடுகள் ஒப்பத்தக்கனவல்ல வென்பது எமது கருத்து ஆதலின் அவற்றைப்பற்றிச் சிறிது கூறுவாம்.

(க) 'சபை நடக்கும் 3 நாட்களிலும் ஒருவரே அக்கிராசனம் வகிக்க வேண்டும். அதுதான் முறையும் சபையின் ஒழுங்கும் ஆகும்' என்கின்றார். காங்கிரஸ் சபை நிகழ்ச்சியைக் காட்டாகக் காட்டுகிறார். இப்படித்தான் நடக்க வேண்டுமென்பது விதியன்றே. மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் ஜூபிலிபூர்த்திக் கொண்டாட்ட நாட்களில் ஆங்கிலம் கற்ற பண்டிதர்களும் தமிழ் வல்லுநரும் பிறரும் கூடியிருக்கிறார்கள். 3 நாட்களிலும் ஒருவரே அக்கிராசனம் வகியாமல் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொருவர் அக்கிராசனம் வகிக்கக் காண்கிறோம். மற்றும் பல சபைகளிலுமிவ்வாறே நடைபெறுகின்றதையும் பார்க்கிறோம். இதனால் 3 நாளிலும் ஒருவரே அக்கிராசனம் வகிக்கவேண்டுமென்பதை விதியாகக் கொள்ளப்படாமை ஏற்படுகின்றதன்றோ? ஒருவரே 3 நாட்களிலும் அக்கிராசனம் வகிப்பதும், ஒவ்வொருவேளையில் ஒவ்வொருவர் அக்கிராசனம் வகிப்பதும் அவரவர்கள் சௌகர்யத்தைப் பொறுத்ததேயன்றி இப்படித்தான் இருக்க வேண்டுமென்றும் இல்லாவிடில் குறையாகுமென்றும் வரையறுத்துக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

(உ) விவரணப் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தபடி உபந்யாசங்கள் நடக்கவில்லை யென்றும், அதற்குச் சபையார் உத்தரவாதிகளாகார்க ளென்றும், வந்திருந்த வித்துவான்களே உத்தரவாதிக ளென்றும், கூறுவதுடன் எக்காரணம் பற்றியும் மாற்றுதல் கூடாதென்றும் எழுதுகிறார். வைசிய சிவாநந்த சபையார் வெளியிட்ட விவரணப் பத்திரம் உபந்யாசர்கள் கருத்து அறிந்து வெளியிடுதற்கு அவகாச மின்மையால் அவசரமாக வெளியிடப்பட்ட தென்பதும், சமையத்துக்கேற்றவாறு மாறுதலடையக் கூடுமென்பதும் குறிப்பிடப்பெற்றுள்ளது. அன்றியும் குறித்தகாலத்தில் ஒரு உபந்யாசகர்க்கு ஏதாவது அசௌகர்யம் ஏற்பட்டால் மாற்றத்தானே வேண்டும். விவரணப் பத்திரத்தில் கவனக்குறிப்புக் காட்டாத விஷயத்திலும் இங்ஙனம் மாறுதலடைதல் சகசமே. கவனக் குறிப்புக் காட்டியிருக்கவும் இதனை யொரு குறையாகக் கூறுவது சரியன்று.

(ங) "உபந்யாசகர்கள் இன்னார் அக்கிராசனத்தில் நான் உபந்யசிக்க மாட்டேனென்பதும், இன்னார் அக்கிராசனத்தில் உபந்யசிப்பே னென்பதும் பொது நலங்கருதுவோர் சொற்களாகா" என்கிறார். உபந்யாசகர்கள் தாங்கள் உபந்யசிக்கும் விஷயத்துக்குத் தக்கவாறு அக்கிராசனர் அமைந்திருப்பது தெரிந்தே உபந்யசிக்க வேண்டும். வேதாந்தக் கொள்கை யுடையார் அக்கிராசனத்தின் கீழ் சித்தாந்த விஷயம் உபந்யசிக்கப்படுமாயின் அக்கிராசனர் எங்ஙனம் ஆமோதித்து முடிவுரை கூறுவர்? தற்காலமோ காஷாய விபூதி ருத்திராக்ஷதா

ரணங்களால் சைவப்பழங்கள் போல நடித்து நான் சைவசித்தாந்தி யென்று சொல்லி உலகை வஞ்சிக்கும் போலிவேஷதாரிகள் மலிந்துள்ளார்கள். ஆகலால் உபந்யசிப்போருக்கும் உபந்யசிக்கப்படும் விஷயத்துக்தும் விரோதக் கோட்பாடில்லர்தவர்களின் அக்கிராசனத்தின் கீழ்த்தான் உபந்யசிக்கவேண்டும். ஆதலின் உபந்யசிப்போர் அக்கிராசனரைப் பற்றி ஆராய்ந்து கோடல் நக்கதேயாகவும் இதனையொரு குறைவாகச் சொல்லல் சிறிதும் அடாது. கருத்தொற்றுமையுடையார் அவையிற் சென்று உபந்யசிக்க வேண்டுமென்பது "கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச், சொற்றெரிதல் வல்லா ரகத்து" என்னுந் தேவர் திருவாக்கானுந் தெரியலாம். தாழ்ந்தாரவைக்கண் ஒரு வழியும் சொல்லலாகா தென்பதை "புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க, நல்லவையுள், நன்கு செலச்சொல்லு வார்" "அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த, ரல்லார்முற் கோட்டி கொளல்" என்னும் அவர் திருவாக்கே வலியுறுத்தாநிற்கும். ஆகவே அவையறிந்து உயந்யசித்தல் உபந்யசிப்பவர் கடமையாகவும் பொது நலங் கருதவோர் சொர்களாகா, என வற்புறுத்திக் கூறுதல் பெரிதும் முரண்பாடுடையதேயாம்.

(௬) "ஆத்தங்குடி விவேக விள்க்க வித்தியாசாலை மாணவர்க்ள் சைவசித்தாந்தக் கோர்ட்டு என்று பெயரிட்டு புலான் மறுத்தல் விஷயமாக நடித்தார்கள். அது மிகவும் பயனுடையதாகவும் அக்கிராசனரவர்களும் ஸ்ரீ மு. இராகவையங்காரவர்களும் கண்டனஞ் செய்து பேசியது சிறிதும் பொருந்தாது" என்கிறார். இவ்விஷயத்தில் வைசியமித்திரன் பத்திராதிபரவர்கள் கருத்து மிக விபரீதமாகின்றது. என்னெனில் மாணவர்கள் நடிப்புக்கு முந்தி நடந்தது ஸ்ரீ மு- இராகவையங்காரவர்களின் உபந்யாசம். உபந்யாச விஷயம் "கற்குமுறை" என்பதனால் மாணாக்கர்கள் கற்கும் முறைகளைக் கூறிவரும் வரிசையில் பெருஞ் சபைகளில் இயற்கை யறிவு கொள்ளாத மாணவகர்கள் எழுதிப் பாடம் பண்ணியவைகளைச் சொல்லுவதிலும் அவர்கள் பல நூல்களை முறையாகக்கற்றுச் சொந்தவுணர்ச்சியுடன் உபந்யசிப்பதற்கு முயலவேண்டுமென்றும், கிளிப்பிள்ளைபோல் பாடம் பண்ணிய சொற்றொடர்களை யொப்பித்தலால் அறிவு வந்து விட்டதாகக் கருதிவிடலாகா தென்றும், விநோதார்த்தமாக ஏதோ நாடக நடிப்ப விரும்பினும் அதன் பொருட்டு மிகுந்த காலச் செலவு செய்யப்படாதெனவும், நகரத்தார் வசிக்குமிடங்களில் கூடும் சபைகளில் மாணாக்கர்கள் கிளிப்பிள்ளை போலப் பாடஞ்செய்து கூறுதற்கு மிக்க கால்லம் கொடுத்தல் அம்மாணாக்கர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடையேயாகும், எனவும், சபையேறிப் பேசுதல் மட்டிலமையாது வியாசங்கள் எழுதிப் பழகிறாற்றான் எழுவாய் பயனிலை முதலிய இலக்கண ஆராய்ச்சி வெளிப்படுமெனவும் கூறினார்கள். இதன் பின்பு ஆத்தங்குடி மாணாக்கர்களின் நாடகம் நடந்தது. ஆகவே பின் வரப்போகும் மாணாக்கர்கள் நாடகத்தைப்பற்றி அதைப் பார்க்கு முன்னமே ஐயங்காரவர்கள் கண்டித்துப் பேசியதாகச் சொல்வது எவ்வாறு பொருந்தும்? இவ்வித விஷயங்களை மாணாக்கர்களின் ஆசிரியரிடம் தனித்துச் சொ

317

வைசிய சிவானந்த சபையின் வருஷபூர்த்திக்கொண்டாட்டம். நகள
ல்ல வேண்டுமே யொழியப் பயிரங்கத்தில் கூறுதல் சிறிதும் அடாது'' என்கி
ருர். ஒரு கலாசாலை மாணவர்களைப் பற்றிக் கூறவந்தாலன்றே அங்ஙனம்
கருதலாம்? பொதுவாக மாணக்கர்கள் அறிந்து கொள்ளும் சில முறைகளைக்
கூறும்போது எத்தனை யாசிரியர்களிடம் தனித்துக் கூறுவது? இது எப்படி
முடியும்? இது இப்படியாக ஒரு சபையில் நடந்த விஷயங்களில் நேரும் குறை
பாடுகளை மட்டும் பல்லாயிரம் பேரறியப் பத்திரிகையில் வெளியிடலாம்போ
லும். அச்சபையாரிடமாவது உபந்யாசகரிடமாவது தனித்துக்கூறுதலாகாதோ?
பிறரிடம் குறைகண்டு கூறவருமுன் அக்குறை தம்மிடம்பற்றுவாறு காக்க
வேண்டுவது மிகவும் அவசியமாகும். நாடகம் முடிந்த பின்பு அக்கிராசனாதி
பதியாயிருந்த ப்ரும்மஸ்ரீ மு. கோவிந்தசாமியய்யரவர்கள் ஷெ நாடகத்தைப்
பற்றி வியந்து பாராட்டிப் பேசினார்களே யல்லாமல் கண்டித்து யாதொன்றும்
பேசவில்லையே. ஆனால்''சைவசித்தாந்தக் கோர்ட்டு''எனப்பெயரிட்டிருந்ததால்
பதி பசு பாச மென்னும் முப்பொருளுண்மை விஷயமாக, பிரபோத சந்திரோ
தயமென்னும் வேதாந்த நாடகம்போல் சித்தாந்த விஷயமாக எதாவது உருவகப்
படுத்தி யமைத்திருக்கலா மென நினைத்ததாகவும், இப்போது தான் அங்ஙன
மில்லையென்று தெரிந்ததாகவும், ஆயினும் புலான் மறுத்தல் சைவத்துக்கு மிக
வுரிமை கொண்டுண்மையால் நன்றாயிருந்த தெனவும் கூறினார்கள். இதிலும்
கண்டித்துப் பேசியதாக எதுமில்லையே? இவ்வாறிருப்பவும் ஐயங்காரவர்களும்
அக்கிராசனரவர்களும் மாணாக்கர்கள் நடிப்பைக் கண்டித்துப் பேசினார்களென்
று சொல்லியதற்கு யாம் மிக வருந்துகிறோம். இதில் அக்கிராசனாதிபதியய்யர
வர்கள் ''புலான் மறுத்தல்'' என்ற விஷயத்திற்கு சைவசித்தாந்தக் கோர்ட்டு
என்று பெயரிட்டிருப்பது பொருந்தா தென்பதைக் குறிப்பாலுணர்த்தியதன்
காரணம் நாடக பாத்திரங்கள் மாணாக்கர்களே யாதலாலும், புலான் மறுத்தல்
தான் 'சைவசித்தாந்தம்' என்று சிலராவது நினைத்தல் கூடுமாதலாலும், அவ்வி
ருவரும் உண்மை யறிந்து கொள்ளுதற் பொருட்டே கூறினார்களன்றி எதாவ
து துவேஷ நினைப்புக் கொண்டு கூறினவர்களல்லர் என்பதையும் நாம் நன்றாக
அறிவோம். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து தேவகோட்டை வைசிய சிவா
நந்த சபையின் முதல் வருஷபூர்த்திக் கொண்டாட்டமானது எல்லா விதத்தானும்
யாதொரு குறையு மின்றி நிறைவேறியதேயாகும். உபந்யாசகர்களில் யாரும்
பகைமைக் குணம் பாராட்டியவர்களல்லர் என்பது நிச்சயம். இச்சபையானது
பல்லாண்டு பல்லாண்டு வாழுமாறு திருவால வாயுடையான் திருவடித் தாமரை
மலர்களை மனமொழி மெய்களாற் சிந்தித்துத் துதித்து வணங்குகின்றோம்.

பத்திராதிபர்.

நாட்டுக்கோட்டையார் தருமமும் "சுவாமி" வேதாசலமும்.

நிகழும் 1914ஸு ஜனவரிமீ 19௳ 26௳களில் வெளிவந்த 'வைசியமித்திரன்' பத்திரிகையில் "நாட்டுக்கோட்டையார் தருமம் பயன் படுமா" எனத் தலைப்பிட்டு "சுவாமி" வேதாசலம், என்பார் வரைந்து வெளியிட்டவற்றைக் கண்டனம். இவர் எழுதிய விஷயங்கள் எந்தமட்டில் உண்மையுள்ளனவென்பதைப் பற்றி ஆராய்வாம்.

(க) "இவ்வளவு காலாகோலமான இந்தக்காலத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் கோடி கோடியாகத் திரவியத்தைச் செலவழித்துச் சிவாலயங்களை யிடித்துக் கட்டுவதில் என்ன பயன் உண்டாகப் போகிறது"

என்கிறார். "காலாகோலம்" என்பது எப்பொருள் பயப்பதோ? பொருளற்ற வெற்றுரைத் தொடையாகவே யமைந்துளது. சிவாலயங்களைக் கட்டுவதால் விளையும் பயன்களை யிவரறியார் போலும்.

"எட்டுச் செங்கலி னுபினு மீர்ம்புனல் வேணி
வட்டச் சென்னியா னுலயத் திருப்பணி வகுத்த
லொட்டிப் பெற்றவிவ் வுடற்பய னுவதென் றுணர்வீ
ரட்டுத் தீவினை யைந்தவித் தொழுகுமந் தணர்காள்"

என்னுங் காஞ்சிப் புராணத் திருவாக்கால் மானிட சன்மத்தாலடையும்பயன் சிவாலயத் திருப்பணி செய்தலே யென்பது வலியுறுத்தப்படுகின்றது. அதினும் பழைய கோயிலை யிடித்துப் புதுப்பித்தல் மிக விசேடமென்பதை அப்புராணத்திலே

"முரிந்து வீழ்ந்தன வெடித்தன வுடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவுந்
தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறு புண்ணிய நான்மடங் குறுவார்"

என்னும் திருப்பாசுரம் நன்கு விளக்குகின்றது. இங்ஙனமாக சிவாலயத் திருப்பணி செய்தல் பிறப்பின் பயனுமெனவும்,சிலமான திருப்பணிகளைப் புதுக்குதல் அதனினும் நான் மடங்கு விசேடபுண்ணியமுடையதெனவும் நமது சைவநூல்கள் முழங்குகின்றன. இப்படியிருக்க "சிவாலயங்களை யிடித்துக் கட்டுவதால் என்ன பயன்

உண்டாகப் போகிறது" என்று சிறிதும் அஞ்சாது கூறுதல் அதிபாதகமல்லது வேறன்றே. சிவாலயத்திருப்பணியைக் கூலிபெற்றுச் செய்தவரும் அவர்க்குதவியவருங்கூடச் சிவபுண்ணியப் பெரும்பயனை யடைவரென்று சைவசாஸ்திரங்கள் விதிக்கின்றன, ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டிவேந்தன் பொருளைக்கொண்டு போய் ஆலயத்திருப்பணி நடத்தியதும், அவர் பெற்றபெரும்பேறும் உலகப்பிரசித்தமேயன்றோ? சமயாசாரிய சுவாமிகள் மேற்கொண்டு செய்த திருப்பணித் தருமத்தைக் குறை கூறத்தக்கவர் இந்த வேதாசலனாரா! இந்த வேதாசலனாரா!!

(உ) "கோயிலுக்குப் போகிறவர்களே யில்லாதபோது கோயிலைக் கட்டியாகும் பயன் யாது?"

என்கிறார். 'கிணற்றுத் தவளை நாட்டு வளமறியாது' என்றவாறு இவர் கோயிலுக்குப் போயறியாராயினது கொண்டு கோயிலுக்குப் போகிறவர்களே யில்லை யென்பது 'எவ்வளவு அறிவீனம்? மதுரை, திருப்பரங்குன்றம், திருநெல்வேலி, இராமேசுவரம், சிதம்பரம் முதலிய கோயில்களில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நெருங்கிச் சுவாமிதரிசனைக்கு வருவதை இவர் கேட்டுமிரார்போலும். ஐயோ பாவம்! இவ்வுண்மையை யறிய நினைத்தாவது மேற்குறித்த ஆலயங்களிற்போய் அவண்வரும்ஜனக் கூட்டத்தைக் கண்டு தம்மைத் தாமே நொந்து அடங்குவாராக.

(ஈ) "அவர் அந்தக் கோயிலுக்கு அறுபது லட்சஞ் செலவழித்தால் நான் இந்தக் கோயிலுக்கு எண்பது லட்சஞ் செலவழிக்கிறேன் என்கிறார்களே, ஈதென்ன கொடுமை!"

என்கிறார். பதிபுண்ணியமாகிய சிவாலயத்திருப்பணி விஷயத்தில் இத்தகையபோட்டி போடுவது அவர்செய்த பூர்வ புண்ணிய விசேடமேயன்றோ? இங்ஙனம் சிவ புண்ணியவிஷயத்தில் போட்டி போட்டுப் பெருக்கமாகச்செய்யும்நற்றவசீலர்களைக்கண்டு வாழ்த்தி வணங்க வேண்டி யிருக்க "ஈதென்ன கோடுமை" என்று வாய் கூசாது கூறுகின்றாரே. இவர் தான் சைவசித்தாந்தத்தை யறிந்தார்போலும்! "தாமுமொரு பயப்படார் பயப்படுவார் தம்மையும் தம்போற் செய்வார்" என்ற பெரியார் திருவாக்குக்கு இலக்காவார் இவரே. இவர் கூறிய கொடுமை மொழிக்கு இம்மையில் அரசதண்டனை நேரா விடினும் மறுமையில் தெய்வதண்டனை தப்பாதென்க.

(ச) "நன்றாய்ப் பலமாகக் கட்டப்பட்டிருக்கும் பழமையான சிவாலயங் களையெல்லாம் இடித்துக் கட்டுவது எவ்வளவு நிஷ்பிரயோசனமான காரியம்" என்கிறார். இவர் கூறுகிறபடி நன்றாய்ப் பலமாயிருக்கும் ஆலயங் களை வேண்டுமென்று இடித்துக் கட்டுவா ரொருவருமிலர். பல நூறு வருஷங்கட்கு முன்னர்க் கட்டப்பட்டு இப்போது கிலமாகி அபாய ஸ்திதியிலிருக்கும் ஆலயங்களையே புதுப்பிக்கின்றார்கள். இவர் இவ்வுண்மையை யறிய வேண்டுமாயின் சிவ புண்ணிய சீலர்க ளான நாட்டுக்கோட்டையார்கள் புதுக்கிய சிவாலயங்களை அவர்கள் புதுக்குமுன் பார்த்திருக்கவேண்டும். தாம் சிவாலயங்களுக்குப் போவதில்லையேல் போய் வருகின்ற உண்மைச் சிவநேயச் செல்வர்க ளிடம் விசாரித்தறியவேண்டும். தாமே நேரிற் சென்றறியவும் அறிந்தார் வாய்க் கேட்டறியவும் நல்வினையற்ற இவர் மனங்கொண் டவாறு எழுதுவது அறக்கொடும் பாவமேயாம். நாட்டுக்கோட் டையார் என்ற உத்தம புண்ணிய புருஷர்கள் மேற் கொள்ளாவிடில் எத்தனை சிவாலயங்கள் இருந்த இடந் தெரியாது போயிருக்கும்? சிவாலயங்களில்லாவிடில் சைவமதம் எங்கே தலையெடுக்கும்? சைவ சித்தாந்தம் எங்கே பரவும்? சிவாலயத் திருப்பணிப்புண்ணிய விசே டத்தை அளவிட இவரா வல்லுநர்?

"திங்களஞ் சடையோன் சினகரஞ் செய்தோர் திருவிழா வினி தினி னமைத்தோ, ரங்கவன் றடந்தேர் பண்ணுவித் தோர்கள் சாறயர் மறுகமைத் திட்டோர், கொங்கவிழ் தருவி னிழலிற் பன் னாட் குலிசன்வாழ்த் தெடுப்பவீற் றிருந்து, மங்கையோர் பாக னுல கினி னடைந்து மலரடி நீழல்வீற் றிருப்பார்"

என்பதால் சிவாலயத் திருப்பணியாதி செய்தவர்கள் இந்திரனும் வணங்கப் பல்லாண்டு வாழ்ந்து சிவலோகத்தைச் சார்ந்து சிவ பிரான்றிருவடித் தாமரை நீழலை யடைவார்களென்று கூர்ம புரா ணம் முறையிடுவதையும்,

"திருக்கோயி லில்லாத திருவி லூருந் திருவெண்ணீ றணியாத திருவி லூரும், பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும் பாங்கி னொடு பலதளிக ளில்லா வூரும், விருப்போடு வெண்சங்க மூதா வூரும் விதானமும் வெண்கொடியு மில்லா வூரும், அருப்போடு

மலர்பறித்திட் டுண்ணா வூரு மவையெல்லா மூரல்ல வடவி காடே"
என்னும்தமிழ் வேதத்திருப்பாசுரத்தில் கோயிலில்லாதவூர் காடே
யாகுமென்று கட்டளையிட்டிருப்பதையும்,

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னா
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீழ் அடிமைபுகும் அடிமையே அடிமை."

என்னும் பிரமோத்தர காண்டத் திருப்பாசுரத்தில் சிவலாய தரி
சனைசெய்வதே கண்பெற்ற பேறுமெனவும், சிவாலயத்துக்குச்செல்லு
தலே கால்பெற்ற பேறுமெனவும் விசேடித்துக் கூறியிருப்பதையும்,

"மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

[illegible]ம் தாயுமானவர் திருவாக்கில் ஸ்தல தரிசனையின் விசேடம்
இத்தகைத் தென்பதையும் வல்லார்[illegible]வாய்க் கேட்டுணர்ந்து நல்வழிப்
படுவாராக. சிவாலயங் கட்டுதலை "நிஷ்பிரயோசனம்" என்றுநினை
தத இவர் [illegible]ம் எழுதிய இவர் [illegible] [illegible] என்பதை
யும் சிந்திப்பாராக.

ஒரு சிலந்திப் பூச்சி வாய்நூலாற் கோயில்கட்டிய புண்ணியப்
பயனால் சோழமகாரா[illegible] பிறந்து திருக்கோயில் கட்டிச்சிவசாயு
ச்சிய மெ[illegible] அற்புத சரிதத்தைத் திருவானைக் காப் புராணம்
[illegible]ததாரை படித்துப் பாடங்கேட்டறிந்து உய்தி தேடுவராக.
வேறு மதத்தினரான திருமங்கையாழ்வார் "இருக்கிலங்கு செங்கனி
வா யெண்டோ ளீசற் கணிமாட மெழுபதுசெய் துலக மாண்ட,
திருக்குலத்து வளச்சோழன்" என்று கோச் செங்கட் சோழநாய
னாரின் சிவாலயத் திருப்பணியை வியந்து கூறி யிருப்பதுடன், தாம்
களவுசெய் தீட்டியும் விஷ்ணுவாலயத் திருப்பணியை விடாது செ
ய்த சரிதமும் இதன் பெருமையை நன்கு தெளிவிக்கும். அற்ப
ஜந்துவாகப் பிறந்த சிலந்திப் பூச்சி சிவாலயத் திருப்பணி செய்து
அடுத்த ஜன்மத்தில் அரசனாகப் பிறந்தது. மானிடராகப் பிறந்து

வீபூதியுங் காஷாயமுந் தரித்து சுவாமிப் பட்டத்தையும் கொண்ட இவர் 'நிஷ்ப்பிரயோசன' மென்கிறார். இவர்க்கு அடுத்த ஜன்மம் யாதாமோ? அறிஞர் ஊகித்தறிக. சிவாலயங்களிற் பூசா கைங்கர் யங்கள் முட்டுப் பட்டால் அரசர்களுக்குத் தீங்கு விளையும், மழை பெய்யாது. ஜனங்கட்கு நோயுண்டாம். உலகிற்கே கெடுதி விளை யும் என்னுங் கருத்தை விளக்கி

"முன்னவ னார்கோயிற் பூசைகண் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினிக்
கென்னரு ணந்தி யெடுத்துரைத் தானே"
"ஆற்றரு நோய்மிகு மவனி மழைகுன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைக டப்பிடிற் றானே"

என்று திருமந்திரத் திருமுறை விதிக்கின்றதே. ஆலய பூசை தப்பினாலே இத்தகைய பெருந் தீங்குகள் விளையுமாயின் ஆலயமே கட்ட[illegible] ரால் பூசைகள் நிகழ்வ தெப்படி[illegible]கும் என்பதை அறிவுடையார் உணர்வாராக.

சிவாலயத் திருபபணியால் பெறக்க[illegible] ஆ[illegible]பமாகியசிவ புண்ணியமொன்று தானோ எனின் மற்றும் பலவுண்டு. இத்திரு ப்பணிகளிற் செலவிடப் [illegible] பொருள் என்னுகின்றதென ஆராய வாம். இப்பொருள் முழுவதும் கூ[illegible]லி செய்யும் பல்லாயிரம் ஏழைச் சனங்கட்கும், சிற்பசாஸ்திரங் கற்றுவல்ல [illegible]தொழிலாளிகளு க்கும், மற்றும் பல தொழிலாளிகளுக்கும், வேதபாரகரான [illegible] ணர்களுக்கும், சிவாகமவழிப் பட்டொழுகும் ஆதிசைவர்கட்கும் பரம கருணாநிதியாகிய சிவபிரானுக்கும் உபயோகமாகின்றது. நமது நாட்டை விட்டு அயல்நாட்டுக்குப் போகாமல் நம்மவர் வசமே யிருக்கின்றது. சிற்பம் வேதம் ஆகமம் முதலிய நமது சாஸ்திரங் களைக் காக்கின்றது. இன்னும் பல நன்மைகளைச் செய்கின் றது. இன்றைக்கும் சிவாலயங்களை யடுத்துப்பணிவிடை செய்து பிழைப்பவர்கள் எத்தனையாயிரவர்? இத்திருப்பணித் தரு மத்தை நாட்டுக்கோட்டை நகரத்தார் கைக்கொள்ளாதிருப்பின்

நம்முன்னோர் பாதுகாத்த சிற்பமுதலிய சாஸ்திரங்கள் பல நசித்தே போயிருக்குமன்றோ? நமது தேசத்து ஏழைச் சனங்களில் எத்தனையாயிரவர் கெட்டால் முதலிய அயற்றேசஞ் சென்று படாத பட்டு உயிர் துறந்திருப்பர்? இன்னும் இத்திருப்பணிப் புண்ணியத்தால் நமது தேசமும் நமது மதமும் அடைந்துள்ள பயனை அளவிட யாராலாகும்? வைஷ்ணவர்கள் தங்கள் கோயில்கள் பெரும்பாலும் பழமைப்பட்டுவருவதையும் அவற்றைப் புதுப்பிக்கப் பெருஞ் செல்வர்கள் கங்கணங்கட்டி முன்வராதிருப்பதையும் நினைத்து இன்னும் சின்னாளில் எவ்வாறுமோ என்று வருந்துகின்றனரே. அப்படியிருக்க நமது சைவசமயமும் சாஸ்திரங்களும் தழைத்தோங்கும்படி சிவாலயத்திருப்பணிப் புண்ணியஞ் செய்தற்குக்கங்கணங்கட்டி முன் வந்திருக்கிற உத்தம புண்ணிய புருஷர்களான நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் செய்தனவும் செய்கின்றனவும் செய்வனவுமான பதி புண்ணியங்களைப் பற்றிக் குறை கூறுவது மிகக்கொடும் பாவமேயாகும்.

(ஞ) · (1) செந்தமிழ்ப்பாஷை வளர்வதற்கு நாட்டுக்கோட்டையார் ஒன்றும் செய்யவில்லை. (2) சைவசித்தாந்தத்தை வளர்க்க ஒன்றும் செய்யவில்லை. (3) சைவசமயத்தைப் போதிக்க ஒன்றும் செய்யவில்லை. (4) பரவிவரும் பொய்மதக் கொள்கைகளைத் தடுத்துச் சைவத்தைப் பிரகாசப்படுத்த ஒன்றும் செய்யவில்லை. (5) தேவாராதிகளையும் சமயாசாரியர் சரிதங்களையும் உள்ளவாறு விளக்க ஒன்றும் செய்யவில்லை. (6) குடி கொலை தீய வொழுக்கம் நாஸ்திகம் இவற்றைத் தடுக்க ஒன்றும் செய்யவில்லை. (7) இவ்வளவு முக்கியமான காரியங்களில் ஒன்றும் நிலையானதைச் செய்யாமல் இவர்கள் கல்லிலும் சுண்ணும்பிலும் பொருளை யழித்துக் கோயில் கட்டுவது இங்கே யாருக்கு வேண்டும். என்று கூறியிருக்கின்றார்.

பல வருஷங்களாக நாட்டுக்கோட்டையார் வசிக்கும் பல நகரங்களில் சபைகளும் கலாசாலைகளும் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு சபைகளிலும் ஒவ்வொரு வருஷத்துள் அநேக அரிய பிரசங்கங்களாலும் துண்டுப் பத்திரங்களாலும், வருஷபூர்த்திக் கொண்டாட்டகாலங்களில் அனேகம் வித்துவான்கள் செய்யும் அரிய உபந்யாசங்களாலும் தமிழை வளர்த்துவருவதையும், சைவசித்தாந்தத்தைப் பரப்பி வருவதையும், சைவசமயத்தைப் பரிபாலித்து வருவதையும், மற்றும் அறிவு ஒழுக்கங்களை விர்த்தி செய்வதையும், நம்மவர் பலருமறிவர். இவற்றால் இவர் கூறிய 4 பிழைகள் பரிகரிக்கப்பட்டன.

குருபூசை மடங்கள் எத்தனையோ இடங்களில் கட்டியிருக்கிறார்கள்? அங்கங்கே அறுபான் மும்மை நாயன்மார் திருநக்ஷத்திரங்களில் தேவாராதி புராண பாராயணஞ்செய்து போற்றிவருதலை யாவரேயறியார்? இதனால் 5ஆவது குறை நீக்கப்பட்டது. 6ஆவதாகிய குடி கொலையாதியவற்றைத் தடுக்க உபந்யாசங்கடோறும் வற்புறுத்திவருகின்றார்கள். இதைவிட வேறென்ன செய்யக்கூடும்? இவைகளையெல்லாம் உற்று நோக்காமை இவர் குறையேயன்றி நாட்டுக்கோட்டையார் குறையன்றே. சூரியன் மஞ்சள் நிறமாகத் தோன்றல் கண்ணின் குற்றமன்றி இரவி குற்றமாமோ? 7ஆவது குறை பின் வரும் விஷயங்களால் பறந்தொழியுமாறுகாண்க. இவர்கள்ஏற்படுத்திய சபைகள் கலாசாலைகள் நிலையாக நடைபெறுதற்குவேண்டும் மூலதனம் தொகுத்து வைத்திருக்கின்றார்கள். இன்னும் எல்லா நகரங்களிலும் சபைகளும் கலாசாலைகளும் பரவுதற்குவேண்டும் நன் முயற்சிகளைச் செய்தும் வருகிறார்கள். தேவகோட்டையிலிருந்த ஸ்ரீ வன்றொண்டச் செட்டியாரவர்களும் ஸ்ரீ சிங்கயச்செட்டியாரவர்களும் எத்தனையோ பேர்க்குக் கல்வி கற்பித்தும் நூல்களையியற்றியும் வந்துள்ளார்கள். தற்காலம் காரைக்குடி ஸ்ரீசொக்கலிங்கய்யா அவர்களும் அங்ஙனமே செய்து வருகின்றார்கள். மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்களால் எத்தனையோ சபைகள் ஏற்பட்டுள்ளன. இவர்கள் எத்தனையோ அருமையான உபந்யாசங்களைச் செய்து வருகிறார்கள். நாளிது தைமீ ௧௦உ தேவகோட்டை வைசியசிவானந்த சபையில் தேவகோட்டை ஸ்ரீமான் அரு. அரு. சோம. அருணாசலஞ்செட்டியாரவர்கள் "சிவலிங்க வழிபாடு" என்ற அரிய விஷயத்தை நன்கு உபந்யசித்தார்கள். இன்னும் இவ்வகுப்பினரிற் பலர் நூன்முறைப்படி ஒழுங்கான உபந்யாசம்புரிந்து வருகின்றார்கள். பல வித்துவான்களை அழைத்து நல்லுபந்யாசங்கள் செய்விக்கின்றார்கள். எத்தனையோ சிறந்த நூல்களை அச்சிடப்பொருளுதவி செய்துள்ளார்கள். தற்காலத்தில் சைவந்தழைக்க அவதரித்த பெரும் புண்ணியசாலிகள் நாட்டுக்கோட்டையார்களேயாவர். இப்படி எல்லா நற்காரியங்களையும் இவ்வகுப்பினர் செய்துவரும்போது ஒன்றும் செய்யவில்லையென்பது எவ்வளவு அறிவீனம்? "கல்லிலும் சுண்ணாம்பிலும் பொருளை யழித்துக் கோவில் கட்டுவது இங்கே யாருக்கு வேண்டும்" என்கிறாரே, இச்சொற்றொடர்களிலுள்ள கொடுஞ் சொற்கட்கு இறைவனே பலனருள்க. யாருக்கு வேண்டுமென்கிறாரே. இவர்க்கு வேண்டுமா என்று ஒருவரும்

கேட்பாரில்லையே. இவர்க்கு வேண்டாமெனில் உலகிற்கே வேண்டாமென்பது இவர் கருத்தாகின்றது. இவர் தம்மளவில் தான் உலகம் இருப்பதாக நினைத்தனர்போலும் அந்தோ பரிதாபம்!

(௬) " சரீர வன்மையுடையோர் கொழுக்கத்தின்று சோம்பேறிகளாகத் திரியும்படி நாட்டுக்கோட்டையார்கட்டுவித்த சத்திரஞ் சாவடிகள் தாம் இங்கேயார்க்கு வேண்டும் " என்கிறார்.

எல்லாத் தானங்களிலும் சிறந்தது அன்னதானம். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதை இவர் கற்றிலாததனால் இவ்வாறு கூறத்துணிந்தார். நாட்டுக் கோட்டையார் கட்டுவித்த சத்திரஞ்சாவடிகளை இவர்கண்டவரல்லர். கேட்டவருமல்லர்; இராமேசுவரந் தனுக்கோடிச் சத்திரத்தில் எல்லா சனங்கட்கும் உண்டியும் உறையுளும் மருந்தும் பிள்ளைப்பாலும் மற்றும் வேண்டிய சகல பொருள்களும் கொடுக்கப் படுகின்றனவே. சாணி முதல் சகல பொருள்களையும் தொகுத்து வைத்துக் கொண்டு ஸ்நானத்துக்கு வரும் யாத்திரை வாசிகள் யாவர்க்கும் வேண்டியதை யுதவுகிறார்களே. தேவகோட்டை, திருமெய்யம், ஸ்ரீரங்கம், சிதம்பரம்; திருவண்ணாமலை, திருநெல்வேலிக்குறுக்குத்துறை, சத்துருசங்காரக்கோட்டை முதலிய எத்தனையோ இடங்களில் சத்திரம் அமைத்து எல்லோருக்கும் அன்னமும் அரிசியும் பாத்திரங்களும் மற்றும் வேண்டுவனவும் உதவச் செய்திருக்கிறார்களே. இவற்றை யெல்லாம் விசாரித்தறியாது காகிதத்துக்குக் கேடாக நினைத்தபடி யெல்லாம் எழுதிக் குறைகூறுவது அறிவுடையார் செயலாகுமா? இனியேனும் விசாரித்து அடங்குவாராக.

(௭) " நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் தருமம் இதுவரை யிப்படி வீணாய்ப்போனாலும்-இனியாவது அவர்கள் இந்தக்காலத்துக்கு அவசியம் வேண்டிய காரியங்களைச்செய்ய முன் வரவேண்டும் " என்கிறார்.

இதுவரை நாட்டுக்கோட்டையார் செய்த புண்ணியங்களெல்லாம் வீணாய்ப்போயினவென்று சிறிதும் நாணமின்றியும் பயமின்றியும் எழுதினரே. இவர்க்கு இவ்விததுரபிப்பிராயமுண்டானது இவரது கன்மவசமேபோலும். சிவபுண்ணியங்களையெல்லாம் வீணாய்ப்போயினவென்று நாஸ்திகருங்கூடக் கூறத்துணியாரே. இவர் நாஸ்திகரினும் தாழ்ந்த கொள்கையினரென்பது இவர் வாய்ச்சொல்லாலே துணியப்படுகின்றது. நல்லாசிரியனைபடுத்துப் பயபக்தியுடன் சைவ

சாஸ்திரங்களைக்கற்றுணராது தான்றோன்றிக் கற்றுக்குட்டிகளாய் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆடு குழை தின்பதுபோன்று சில கவிகளைக் கற்றுக்கொண்டவளவிலே யிறுமாந்து 'ஞானி' 'சுவாமி' என்ற பட்டங்களைத் தமக்குத்தாமே சூட்டிப் படாடோபஞ்செய்து பேதையரை வஞ்சித்துத்திரியும் மனிதப்பதர்களான முழுமக்களுங்கூடப் புண்ணியமான காரியங்களை வீணாய்ப்போயினவென்று சொல்ல அஞ்சுவர். இந்த "சுவாமி" வேதாசலத்தின் கொள்கைகளெல்லாம் விபரீத வழியாகவே நிகழ்வனவென்பது நன்கு தெரிகின்றது.

(அ) (1) எல்லாரும் தமிழ் கற்கச்செய்தலுடன் கற்றவர்கட்கு வருவாய்க்கு இடம் செய்யவேண்டும் (2) தமிழ்க்கலாசாலைகள் ஏற்படுத்தவேண்டும். (3) மாணாக்கர்கட்குச் சகாயம் செய்யவேண்டும். (4) சைவசித்தாந்த சாஸ்திரங்களைக் கற்பிக்கவேண்டும். (5) பிரசங்கஞ்செய்வித்தல் வேண்டும். (6) சைவசித்தாந்த சபைகளும் தமிழ்ச்சங்கங்களும் ஏற்படுத்தவேண்டும். (7) தமிழ்ப்பத்திரிகைகளைப் பரப்பவேண்டும். (8) கூன்குருடு முதலிய ஏழைகட்குதவவேண்டும். இப்படிச்செய்தால்தான் நன்மையுண்டாகும் என்று முடிவுரை கூறுகிறார்.

"சுவாமி" வேதாசலம் இப்பொழுதுதான் மேற்குறித்த விஷயங்களைப் புதிதாகக் கண்டுபிடித்துக் கொண்டவர் போன்று நடிக்கின்றார். "பக்தா இதுதானா பூலோகம்" என்று கேட்டவன் கதை போலிருக்கின்றது இவர் கூற்று. நாட்டுக்கோட்டையார் இதுவரையில் தெரியாத எத்தனை அரியவிஷயங்களைப் போதிக்கின்றார்? பேஷ்! பேஷ்!! இவரே சாமர்த்தியசாலி! இவரே உண்மை ஞானி! இவர்தாம் சுவாமிப் பட்டத்துக் குரியர்! நாட்டுக்கோட்டையார்கள் இதுவரை எத்தனையோ கலாசாலைகளை ஸ்தாபித்துள்ளார்கள். தமிழ் கற்கச்செய்துள்ளார்கள். கற்பவர்கட்கு உதவி செய்துள்ளார்கள். சபைகளை ஸ்தாபித்துள்ளார்கள். வித்துவான்களைக் கூட்டிப் பிரசங்கிக்கச் செய்துள்ளார்கள். இவையெல்லாம் செய்திருக்கிறார்கள்: செய்கின்றார்கள். செய்வார்கள். தமிழ் வித்துவான்கட்கு உதவவேண்டு மென்கிறாரே. இதுவரை பிரசித்தி பெற்ற வித்துவான்களில் நாட்டுக்கோட்டையாரிடம் பெரும்பொருள் பெறாதவர் யாவர்? ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள், ஸ்ரீ மகா வித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள், ஸ்ரீ பொன்னையாபிள்ளை

நாட்டுக் கோட்டையார் தருமமும் "சுவாம[illegible] வேதாசலமு[illegible] டையவர்கள், ஸ்ரீ சு. சோமசுந்தரநாயகரவர்கள், ஸ்ரீ சபாபதிநாவலரவர்கள் முதலிய சென்ற காலப்புலவர்களில் நாட்டுக்கோட்டையாரிடம் பல்லாயிரக் கணக்கான திரவியசகாயம் பெறுதவர்கள் யாவர்? எல்லாரும் பெற்றவர்களே. தற்காலம் உயிருடன் இருக்கிற வித்துவான்களில் நாட்டுக்கோட்டையார் பொருளுதவி பெறுதவர்கள் யாவர்? நாட்டுக்கோட்டையாரென்ற வைசியப் பிரபுக்கள் கடைக்கண் சாத்தாவிடில் தமிழ் வித்துவான்கள் பாடு திண்டாட்டமேயாகும். எத்தனை பத்திரிகைகளை ஆதரிக்கின்றார்கள். எத்தனை புராணங்களை வெளியிட்டுள்ளார்கள். எத்தனை சாஸ்திரங்களை வெளியிட்டுள்ளார்கள்? வெளியிடுதற்கு முயன்றுகொண்டிருக்கிறார்கள். இங்ஙனமாக வித்துவான்களை ஆதரிப்பதும் தமிழை வளர்ப்பதும் சைவத்தைப் பரிபாலிப்பதும் குலதருமமாகக்கொண்டு நடத்தும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கட்கு இவர்தாம் ஏதோ புதிதாகக் கண்டுபிடித்து அறங்கூறுவது போல் பாசாங்கு செய்வது மிகவும் விந்தையே. மகப்பல பெற்றுட்கு மல்டி மருத்துவங் கூறினாற் போன்று நாட்டுக்கோட்டையார்க்கு இவர் அறங்கூறப்புக்கது நகைப்புக்கே இடமாம். ஒருக்கால் தமது பிரசங்கத்தைக் கேட்கவேண்டு மென்றும், தமக்கு உதவி செய்யவேண்டுமென்றும், ஞானசாகரம் என்ற பெயரைக்கொண்டதொரு பத்திரிகையைத் தாம் நடத்துவதாகச் சொல்லிக்கொள்வதால் அஞ் ஞானசாகரத்துக்கு உதவவேண்டு மென்றும் தாம் கொண்ட உட்கருத்தை இவ்வாறு வெளியிடுமாறு இவர்கொண்ட பேராசையே இவரை இங்ஙனம் செய்ய இழுத்துவிட்டது போலும். இதுவரை எத்தனையோ வித்துவான்களை வரவழைத்து உபந்யசிக்கச் செய்து உதவிபுரிந்தும் பத்திரிகைகளை ஆதரித்தும் வரும் நாட்டுக்கோட்டையார்கள் இவரை வரவழையாமலும் இவர்க்குப் பேருதவி செய்யாமலும் இவரது பத்திரிகையைப் பாதுகாவாமலுமிருப்பது உண்மைதான். ஏன் இவரைக் கவனிக்கவில்லை யெனில், இவர் பிரசங்கங்கள் சைவசித்தாந்த சாஸ்திரங்கட்கு மாறுபட்டுள்ளன. இவர் பத்திரிகையும் அங்ஙனமே பொருந்தாத விஷயங்கள் சிலவற்றை வெளியிடுகின்றது. திருநெல்வேலியில் இவர் சென்று உபந்யசித்தபோது சிவலிங்கவழிபாடு சமீபகாலத்தி லேற்பட்டது என்று வாய்கூசாமல் ஏதேதோ பேசினார். உடனே சைவசித்

தாந்த சாஸ்திராராய்ச்சி மிக்குடைய ஸ்ரீ எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள் எழுந்து இவர் கூற்றை மறுத்து இவ்விஷயத்தைப்பற்றி வாதிடவருதிரோ என்றார்கள். இவர் யாம் வாதுக்குவரோம் என்று போயினர். இந்நிகழ்ச்சி தென்னாட்டுள்ளார் பலருமறிவர். இவ்வாறு "சுவாமி" வேதாசலம் தாம் சில புதிய போலிக்கொள்கைகளை யுடையராய்ப் பேதையர்கட்குப் போதித்து வசப்படுத்துகின்றாராதலின் இவர் கொள்கையெல்லாம் உண்மையான சைவமக்கட்குப் பயன்படாதனவாதல் கருதியே நாட்டுக்கோட்டையார்கள் இவரைக் கவனித்தாரல்லர்போலும். மற்றுமுள்ள தக்க வித்துவான்கள் பலரும் நாட்டுக்கோட்டையாரால் அபிமானித்துக் கனப்படுத்தப் பெற்றவர்களேயாமென்பது நிச்சயம்.

"நாட்டுக்கோட்டையார் தருமம் பயன்படுமா" என்று கூறுதற்கு அறிவுடையார் யாரும் துணியார். நாட்டுக்கோட்டையார் தருமங்களை யாராய்வாம். எத்தனையோ சிவாலயத் திருப்பணி செய்கின்றார்கள். எத்தனையோ பசுமடங்களை ஏற்படுத்தி யுள்ளார்கள். எத்தனையோ திரு நந்தனவனங்க ளமைத்துள்ளார்கள். எத்தனையோ அன்னசத்திரங்க ளமைத்துள்ளார்கள். எத்தனையோ குருபூசை மடங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். எத்தனையோ தண்ணீர்ப்பந்தல்க ளமைத்துள்ளார்கள். எத்தனையோ திருவிழா நடத்துகின்றார்கள். எத்தனையோ வேதபாடசாலைகளும், எத்தனையோ ஆகம பாடசாலைகளும், எத்தனையோ தேவார பாடசாலைகளும், எத்தனையோ தமிழ்க் கலாசாலைகளும், எத்தனையோ சபைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு இதுவரையில் பெரும் பொருளுதவி செய்தவர்கள் இவர்களே. இன்னும் எத்தனையோ சங்கங்களுக்குத் தக்க பொருளுதவி யிருக்கிறார்கள். எத்தனையோ குளங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். வயித்தியசாலைகளை யமைத்துள்ளார்கள். வழிகளைச் செப்பனிட்டுள்ளார்கள். எத்தனையோ பிராமணர்கட்கும் பிறர்க்கும் விவாகம் செய்வித்துள்ளார்கள். கிருகதானம், பூதானம், கோதானம், சொன்னதானம், அன்னதானம், வஸ்திரதானம் முதலிய பலவகைத் தானங்களைச் செய்துள்ளார்கள். எத்தனையோ வித்துவான்களை ஆதரித்துள்ளார்கள். எத்தனையோ நூல்களை வெளியிட்டுள்ளார்கள். இன்னம் எத்தனையோ

333

தருமங்களைச் செய்துள்ளார்கள். இவ்வகுப்பினரைப் போலப்பெரும் புண்ணியஞ் செய்கிற வேறொரு வகுப்பினர் யாராவது இருக்கிறார்களா? இல்லையே. இப்படிப்பட்ட சிவபுண்ணிய சீலர்கள் செய்யும் தருமம் பயன் படுமா என்ற கேள்வியும், பயன்படாது என்றவிடையும் கூறவருபவர் சாஸ்திர வுணர்ச்சி சிறிதும் பெறாதவரே யாவார். இவர்க்கு இறைவனே கூலி கொடுப்பன்.

இனி பொதுவாகச் சில விஷயங்களைக் கூறி முடிப்பாம்.

தற்காலத்தில் தமிழ் ஆரியம் ஆங்கிலம் முதலிய பாஷைகள் ஒன்றிலாவது முறையான நூலுணர்ச்சி கொள்ளாமல் எல்லாந் தெரிந்தவர்களாகப் பாவித்தும், ஒரு சமயத்தைப் பற்றியாவது நன்கு ஆராய்ந்தறியாமல் எல்லாமதங்களையும் கரைகண்டவராகக் கருதியும், "நான் சமரச ஞானி" எனக்கூறியும், "எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் யோகத்தைப்போதிக்கிறேன், அதற்கு இத்தனை ரூபா கொடுங்கள். ஞானத்தைப் போதிக்கிறேன் அதற்கு இத்தனை ரூபா கொடுங்கள். என் உபதேசமே பயன் தரும். கூலிவாங்கித் தீக்ஷை செய்யும் ஏனைய குருக்களிடம் தீக்ஷை பெற வேண்டாம். அதனாற் பயனில்லை. எனக்கு வெளிப்படைச் சீடர்கள் இத்தனை ரூபாவும், ரகசியச் சீடர்கள் இத்தனை ரூபாவும் தந்தால்அவரவர்கள் கொடுக்குந் தொகைக்கேற்பவே ஞானபோதனை செய்வேன்" என்று கூறி "அழிபவர் பொருள்கொண் டெள்ளுக் கெண்ணெய்போ லளந்து காட்டிப், பழிபடு போகம் விற்கும் பரத்தையர்" போன்று திரிகின்றவர் பலர் மலிந்துள்ளார். இவர் கூட்டத்தினர் நாஸ்திகருக்கு மூத்தவரோ இளையவரோ அறிய முடியவில்லை. இத்தகையார் சிலர் கோயில்கட்டுவதால் பயனென்ன? கடவுள் எங்கும் இருக்கிறார். உலகமெல்லாம் கோயில் தான் என்பனவாகிய போலிஞானம் பேசிப் பிறர்பொருள் கவரமுற்படுவர். இங்ஙனம் வருபவரெல்லாம் நாட்டுக் கோட்டையார் கோயில் கட்டுவதில் பணத்தை வீணாக்குகின்றன ரென்று கூறுவர். இவர் வெற்றுரைகளாற் பயனில்லை யென்பதும், நாட்டுக் கோட்டையார்கள் பற்பல தருமங்களை நாடோறும் செய்து வருகிறார்களென்பதும் மேலே விளக்கப்பெற்றன. ஆனால் கோயில் கட்டுவதில் அதிகப் பொருள் செலவிடுவ துண்மைதான். அவர்கள் சிவபுக்தி யதிக முற்றவர்களாதலின் அங்ஙனம் செய்கின்றார்கள், உலக

த்தில் எத்தனை ஜாதியாருள்ளார்கள்? பிற ஜாதியார்களில் எத்தனை பேர் பெரும் பொருளுடையார்கள்? பிராமணர்களில் எத்தனை பேர்கள் மிக்க செல்வமுடையார்? வேளாளர் முதலியார் முதலியவர்களில் எத்தனைபேர் பெருஞ் செல்வம் வைத்திருக்கிறார்கள்? நாட்டுக் கோட்டையார் சில தருமங்களைப் பிரபலமாகச் செய்து வந்தால் ஏனையர்கள் மற்றுமுள்ள தருமங்களைச் செய்யலாகாதா? அறம்போதிக்க வருகிற பிரசங்கிகளும் சாமியார்களும் ஏனைச் சாதியார்களுக்குப்புத்தி போதித்துத் தாம் தாம் கருதும் அறங்களைச் செய்யத் தூண்டலாகாதா? பணங்காத்த பூதம் போன்று இருக்கும் பிறமனிதர்களை யெல்லாம் விட்டு நாட்டுக் கோட்டையாரிடத்தில் மட்டும் வந்து அதைச் செய்யாதே இதைச்செய் என்று வாதிடுவதிலும் ஒன்றும் செய்யாதவர்களிடம் போதனை செய்து திருத்தலாகாதோ? சைவசமய சம்பந்தமாகவும், தமிழ் விர்த்தி சம்பந்தமாகவும் நூன் முறைப்படி புண்ணிய கைங்கர்யஞ் செய்கின்ற நாட்டுக் கோட்டைச் செட்டியார்களை அந்நிலையில் மேலும் ஊக்கி வருதலே நலலறிவாளர் செயலாகும். மற்றுஞ் சில தருமங்களைச் செய்விக்க விரும்பினால் தாம் விரும்புகிற தருமத்துக்கும் ஏதாவது உதவுங்களென்று கேட்கலாமன்றி நீங்களிதுவரை செய்து வருகிற தருமங்கள் வீணென்றும் நிஷ்பிரயோசன மென்றும் யாருக்கு வேண்டுமென்றும் கொடுஞ்சொற்களைக் கூறுவது 'தான்' உண்ணுஞ்சோற்றில் மண்ணைவாரிப் போட்டுக் கொள்வதே போலாம். இவ்வளவிலாவது "சுவாமி" வேதாசலம் என்பார் தமது குறையைத் தாமே நிதானித்துச் சிந்தித்தறிந்து அடங்குக.

"நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

இங்ஙனம்,

மூ. ரா. கந்தசாமிக்கவிராயர்.

இல்லறமா? துறவறமா?

சிலகாலத்துக்குமுன் சோழநாட்டில் சேய்க்காடென்னும் ஊருக்குச் சென்றிருந்தேன். மாலை 3 மணிக்கு அங்கே ஏதோ சபைகூடுவதாகவும் பலர் பிரசங்கிப்பதாகவும் ஒரு சுவாமியார் தலைமை வகிப்பதாகவும் கேள்வியுற்று அங்கு போனேன். சபை கூடியிருந்தது. மணி 3—30 ஆகியும் பிரசங்கம் தொடங்கவில்லை. ஏனென்று விசாரிக்க, தலைமைச் சுவாமியார் வரவுக்காகக் காத்திருப்பதாக அறிந்தேன். 4 மணி சுமாருக்கு தலைமையரையழைக்கப் போனவர்கள் வந்து "வெயிற்கொடுமையாயிருப்பதால் சுவாமிகள் வரமுடியாதென்றும், சபை கூடியிருப்பதால் விவரணப்பத்திரத்தில் கண்டபடி முதலிரண்டு பிரசங்கம் நடக்கட்டுமென்றும், 6 மணிக்கு தாம் வந்து தலைமை யாசனத்திலிருந்து பின்னுள்ள பிரசங்கங்களைக் கேட்டு முன்னுள்ள பிரசங்கங்கட்கும் முடிவுரை கூறுவதாகவும் சொல்கின்றார்" என்று கூறினார்கள். இது முறை யல்லவென்று பலர் பலவிதம் பேசினர். பிரசங்கிக்கவேண்டிய நாட்டார் தாம் பிரசங்கிக்கமுடியாதென்றும், தலைமையர் சொல்லியனுப்பியது பிசகுஎன்றும், இப்படிப்பட்டவர்களைத் தலைமையராக்கியது சபைக்கே மானக்கேடு என்றும் கூறினர். யானும் பொறுமையுடன் காத்திருந்தேன். 5—40க்குத் தலைமையர் ஆடம்பரமாகஎழுந்தருளினர். அவர் காவி வேஷ்டியுடையினர். தலைமயிரைக் கிராப்செய்து தைலமாட்டிச் சீவி வகுப்பெடுத்துள்ளார். மூக்காடிட்டுள்ளார். நெற்றியில் பூதிபூசி சந்தனப் பொட்டிட்டு அப்பொட்டினைச்சுற்றிச் சிறு சிறு புள்ளிகளாகக் குங்குமமிட்டு நடுவில் கருஞ்சாந்துக் குறியிட்டுள்ளார். முகக்ஷவரம் செய்து ஏதோ பௌடர் பூசியிருந்தார். இந்தக் கோலத்தைப் பார்த்தேன். இவர் யாரென்று விசாரித்தேன். சென்னைப் பக்கத்தாரென்றனர் இவர்க்கு மனைவி மக்களிருப்பதாகவும் அவர்களையுங் கூட்டிக்கொண்டே வந்திருக்கிறார் என்றும் கூறினர். இதென்ன குடும்பச் சாமியாராக வருவது புதுமையென்று வியந்தேன். ஆயினும் இவர் பேசுவதைக் கேட்பாமென்றிருந்தேன். அன்றிவர் பேசியது ஆன்ம இலக்கணமாம். வாய்திறந்தார். பெண் குரல் போல மெல்லோசையுடன் வெகு நிதானமாகத் தொடங்கினர். ஏதோ சொல்லிவந்து இடையில் முக்கால் மணி நேரம் இவர் பேசியதை யப்படியே யெழுதுகிறேன்.

"இவ்வாறிருந்த மாணாக்கன் வெகுநாள் தேடியலைந்து கடைசியில் குருநாதன் சந்நிதியை யடைந்து அடியற்ற பனைபோல் விழுந்து விழுந்து வணங்கி கைகட்டி வாய்பொத்தி ஒதுங்கி நின்று அருட்கடலே என் மெய்க்குருவே சிவாநுபூதி வாழ்வே பரமகாருண்ய மூர்த்தியே நான் யார் என்றான். குருநாதன் முகமலர்ந்து கருணை ததும்ப திருவாய் மலர்ந்து அன்பனே நீ யார் என்று கேட்கிறாய்! "நீ அன்னம்" என்றார். மாணாக்கன் உடனே சற்குருநாதனை மறுபடி

யும் விழுந்துவிழுந்து வணங்கி விடைபெற்று தன்னிடத்துக்குவந்து தனியிடத்திலிருந்து சற்குருநாதன் திருவாய் மலர்ந்த விடயத்தைப் பற்றிச் சிந்திக்கலானான். என் அருட்குருநாதன் நீ அன்னம் என்றாரே, நான் அன்னமா? நானா அன்னம்? அன்னம் நான்? அன்னத்தை நான் விழுங்குகிறேன். அன்னம் என்னை விழுங்குவதில்லை. என்றால் அன்னம் விழுங்கப்படுகிறது. அன்னத்தால் நான் விழுங்கப்படவில்லை. நான் எப்படி அன்னம் ஆவேன். ஓகோ! என் அருட்குருநாதன் என்னை வஞ்சித்து ஏமாற்றிவிட்டனர் போலும். ஆம். ஆம். வேறில்லை. என்னை அருட்குருநாதன் ஏமாற்றியேயிருக்கிறார். இன்னும் அவரிடமே போவோம். என்று திரும்பி சற்குருநாதனிருக்கும் இடத்துக்குவந்து விழுந்து விழுந்து வணங்கி கைகட்டி வாய்பொத்தி மிக்க பயபக்தியுடன் பக்கத்திலொதுங்கி நின்று சுவாமீ! அருட்குருநாதா! மெய்ஞ்ஞானப்பிழம்பே! பேரின்ப வாழ்வே! மோக்ஷதாதாவே! என்றான். அப்பொழுது கருணைக்குருநாதன் திருவுளமிரங்கி அன்பனே! என்ன விடயம்? என்றருளினர். மாணாக்கன் மீட்டும்வணங்கி சற்குருநாதா தேவரீர் “நான் அன்னம்” என்று திருவாய்மலர்ந்தருளினீரன்றோ? அதனை நான் தனித்துச் சிந்தித்தேன். அன்னத்தை நான் விழுங்குகிறேன். அன்னம் என்னை விழுங்கவில்லை. அன்னம் என்றால் விழுங்கப்படுகிறது. நான் அன்னத்தால் விழுங்கப்படவில்லை. இப்படியாவதால் நான் எப்படி அன்னமாவேன்? என்று கூறினான். சற்குருநாதன் புன்னகை செய்து “நீ தேகம்” என்றார். உடனே சற்குருமூர்த்தியை விழுந்து விழுந்து வணங்கி விடைபெற்று மீண்டு தன்னிடம் வந்து மாணாக்கன் சிந்திக்கலுற்றான்.” என்பதாதியாக வழவழவென்று பேசினர். பேச்செல்லாம் வெறுஞ் சொல்லடுக்கேயன்றிப் பொருட்செறிவில்லை. சொன்னதையே திரும்பத்திரும்ப நிறுத்தி நிறுத்திப் பெண்குரல் காட்டிப் பேசுகிறார். இதுவுமொரு பிரசங்கமாம்? இவருமொருபிரசங்கியாம்? அதிலும் அவைத்தலைமையராம்? எல்லாங் காலக்கொடுமை என்று அற்றைப்பிற்பகல் வீணாகக்கழிந்தமைக்கிரங்கிமீண்டேன்.

இது கிடக்க. இவர் சுவாமியென்ற பட்டமும் காஷாயவுடையும் கொண்டிருப்பதால் துறவியாக வேண்டும். மனைவி மக்களுடன் கூடியிருந்து விடக் கோலங் கொண்டிருப்பதால் சாமான்ய இல்லறத்தாராக வேண்டும். ஒளியும் இருளும் போன்ற இவ்விரு நிலையும் ஒருவர்க்கு எவ்வாறு பொருந்தும்? இத்தகையரை [illegible] ஆச்சிரமியென்று கூறுவது? இவர் நிலை இல்லறமா? துறவறமா? என்ற சந்தேகத்தை மட்டும் அறிஞர் நீக்கியருளப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்.

தஞ்சை முருகவேள்.